/



# குரு நமச்சிவாயா

குரு
நமச்சிவாயா

**GURU NAMACHIVAYA**

**(Parts of this article were first published in *The Mountain Path*, 1992, pp. 13-22**
இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில் மலை வழி-1992, பக். 13-22 என்ற இதழில் வெளியாயிற்று)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)



இந்த இணைய தளத்தில் முன்னர் வெளியான குகை நமச்சிவாயாவின் கதையில் கூறியிருந்தது போல மலையில் அவர் இருந்த பொழுது பல பக்தர்களும் மக்களும் பகவானை சந்தித்து தரிசனம் செய்து போதனைகள் பெற்றுச் சென்றனர். அவர்களில் ஒருவர்தான் குரு நமச்சிவாயா என்பவர்.

அதற்கு முன்னர் அவர்களுக்கு இடையே இருந்த உறவுகள் பற்றிய முழு விவரங்களும் கிடைக்கவில்லை. ஆனால் குரு நமச்சிவாயா பற்றிய செய்திகள் அவர் சித்தி சக்திகள் முழுமையாக கைவரப் பெற்று தெய்வீக நிலையை அடைந்தப் பின்னர்தான் மெல்ல வெளியில் தெரியலாயிற்று.

இரண்டு நமச்சிவாயர்களும் மலை மீது வசித்துக் கொண்டு இருந்த பொழுது குகை நமச்சிவாயா மரத்தில் கட்டப்பட்டு இருந்த துாளி போன்ற படுக்கையில் தன்னை மறந்தபடி படுத்திருப்பார். அதில் படுத்துக் கிடப்பது அவருக்கு மிகவும் பிடிக்கும். அதே சமயம் குரு நமச்சிவாயா அவருக்கு பல்வேறு விதங்களில் சேவை செய்தபடி இருப்பார். ஒரு நாள் அவர்கள் அமர்ந்து கொண்டிருக்கையில் காரணம் இன்றி குரு நமச்சிவாயா உரத்தக் குரலில் சிரிக்கத் துவங்கினார்.

குரு கேட்டார் “ நமச்சிவாயா என்ன அதிசயத்தைக் கண்டு விட்டாதுபோல இப்படிச் சிரிக்கின்றாய் ? ”

சிஷ்யர் குருவிடம் முதலில் அவர்கள் இருவருக்கும் இடையே இருந்த இணக்கத்தைப் பற்றி நினைவு கூறினார் “ முதன் முதலில் நான் உங்களிடம் சரண் அடைந்து விட்டதும் அதை முழு அளவில் ஏற்று இந்த அடிமையை உங்களுடன் இணைத்துக் கொள்வதாகக் கூறினீர்கள்.” என்று பீடிகையாக ஆரம்பித்துவிட்டு தான் சிரித்ததிற்கான காரணத்தைக் கூறத் துவங்கினார்.

# பக்கம்
# 2



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

“தஞ்சாவூரில் (திருவண்ணாமலையில் இருந்து வெகு தொலைவில் இருந்த இடம் அது) தியாகராஜ ஸ்வாமிகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று கொண்டு இருந்தனர். அப்சராக்களைப் போல இல்லாவிடிலும் பல பெண்மணிகள் அந்த ஊர்வலத்தில் நடனம் ஆடிக் கொண்டே வந்தனர். அப்பொழுது நடனம் ஆடிக் கொண்டு இருந்த ஒருவள் தடம் தவறி கீழே விழுந்து விட்டாள். அந்த கூட்டத்தில் அவளைச் சுற்றி இருந்த அனைவரும் அதைக் கண்டு உரத்தக் சிரித்தனர். அதைக் கண்ட நானும் சிரித்தேன், அவ்வளவுதான்”

மற்றொரு முறை தன்னுடைய சிஷ்யர் விசித்திரமாக நடந்து கொண்ட இன்னும் ஒரு சம்பவத்தை குகை நமச்சிவாயா பார்த்தார். தோள் மீது போட்டுக் கொண்டு இருந்த துவாலயை (குளித்தப் பின் உடலை துடைக்க பயன்படுத்தப்படும் துணியை) எடுத்து வினோதமான முறையில் தன் உடம்பின் மீது குரு நமச்சிவாயா உரசிக் கொண்டு இருந்தார்.

“அந்த துவாலயை ஏன் அப்படி உடம்பின் மீது உரசிக் கொண்டு இருக்கின்றாய் ? ” என்று குரு கேட்டார்.

சிஷ்யர் கூறினார் “சிதம்பரத்தில் தங்கம் போல மின்னும் நடனக் கூடத்தில் பெரிய, பெரிய கறுப்புத் சீலைகள் தொங்க விடப்பட்டுள்ளன. அதன் அருகில் பாதி எரிந்து இருந்த ஒரு விளக்குத் திரி கிடந்தது. அதை ஒரு எலி இழுத்துக் கொண்டு போக முயல விளக்குத் திரியில் இருந்த நெருப்புப் பொறியினால் அந்த கறுப்புத் சீலை தீ பிடித்துக் கொண்டு விட்டது. அங்கிருந்தவர்கள் அந்த தீயை அணைக்க முயன்றனர். அந்த திரை சீலை மேலும் தீப்பிடிக்காமல் இருக்க வேண்டும் என்பதினால் நானும் என் மீது இருந்த துவாலையை உடம்பின் மீது தேய்த்துக் கொண்டேன். இனி அந்த தீ பரவாது”

அதைக் கேட்டதும் குருவிற்குப் புரிந்தது, தன்னுடைய சிஷ்யன் தெய்வீக சாதனாவின் இறுதி கட்ட நிலையை வந்தடைந்து விட்டார். ஆனால் அப்படிப்பட்ட சித்திகளை கையாளும் சக்தி பெற்றால் மட்டுமே தெய்வீக நிலையை

# பக்கம்
# 3



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

முழுவதும் அடைந்து விட்டதாக கருத முடியாது. ஆகவே தன்னுடைய சிஷ்யரிடம் இருந்த பக்தியின் தன்மையை சோதிக்க விரும்பினார்.

அதன்படி ஒரு முறை தன்னுடைய பிட்சையப் பாத்திரத்தில் வேண்டும் என்றே தான் வாந்தி எடுத்து விட்டு அந்த பாத்திரத்தை சிஷ்யரிடம் கொடுத்து எவரும் நடந்து செல்ல முடியாத இடத்தில் கொண்டு போய் அதைக் கொட்டி விட்டு வந்து விடுமாறு ஆணையிட்டார். சிஷ்யரோ ஒரு மறைவான இடத்திற்கு அதை எடுத்துச் சென்று தனக்குக் கிடைத்த பிரசாதம் போல அதைக் கருதிக் கொண்டு தானே சாப்பிட்டு விட்டார்.

அது குறித்து வேண்டும் என்றே கண்டு கொள்ளாமல் இருந்த குரு ஒன்றும் தெரியாதது போல அவரிடம் கேட்டார் " அப்பா, நமச்சிவாயா, அதை எவரும் நடந்து செல்ல முடியாத இடத்தில் கொண்டு போய் கொட்டி விட்டாயா?"

சிஷ்யர் தலையை குனிந்தபடி நின்று கொண்டு தான் உண்டுவிட்டதை மறைமுகமாக வெளிப்படுத்தினார் " அது எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அங்கு அதை வைத்து விட்டேன் "

தன்னுடைய சிஷ்யரின் சக்தி அதிகரித்துக் கொண்டே போவதையும், தன் மீது அளவு கடந்த பக்தி இருப்பதையும் கவனித்த குகை நமச்சிவாயா, இனிமேலும் இவரை இங்கு வைத்திருக்கக் கூடாது. வேறு இடத்திற்கு அவரை அனுப்பி இன்னொரு முறை அவரை சோதிக்க வேண்டும் என எண்ணிணார்.

திடீர் என ஒரு நாள் குகை நமச்சிவாயா தனது சிஷ்யரிடம் இரண்டு வரி வெண்பா ஒன்றை பாடிக் காட்டிய பின் கூறினார் "அப்பா நமச்சிவாயா, இந்த வெண்பாவின் மீதி பாகத்தை நீ எனக்கு முடித்துக் கொடுக்க வேண்டும்."

அவர் பாடிய வெண்பா இது :-

" *கனி தரும் ஆலமரம் பறவைகளின் பசி தீர்க்க*
*கனிகளைத் தருகின்றது*
*முற்றி விட்ட மூங்கிலோ*

*பயன் இல்லை என*
*தள்ளி வைக்கப் படுவது இல்லை "*

சிஷ்யருக்குப் குரு தன்னை சோதிக்கின்றார் என்பது நன்கே புரிந்தது. குரு கூறியதிற்கு என்ன அர்த்தம் இருக்கும் என யோசனை செய்தார். ஆலமரம் என்று குகை நமச்சிவாயா கூறியது அவரைப் (குகை நமச்சிவாயா) பற்றித்தான். மரத்தில் உள்ள கனிகள் என்பது அவரை நாடி வருபவர்களுக்கு கருணை கிடைக்கும் என்பதைக் காட்டுகின்றது.

இரண்டாவது வரிகளையும் ஆழமாக சிந்தித்துப் பார்த்தார். முற்றிய மூங்கில் என தன்னை குறிப்பிட்டு உள்ளார். அவை நல்ல சகுனத்தைக் காட்டவில்லை என்பது புரிந்தது. " நீ தெய்வ அருளை முழுவதுமாக அடைந்து விட்டாய். குருவிடம் மற்றவர்கள் என்ன எதிர் பார்க்கின்றனரோ அதை உன்னிடம் இனி அவர்கள் எதிர்பார்க்கலாம் " என்ற அர்த்தத்தில் அதைக் கூறி உள்ளாரோ என எண்ணினார்.



நமச்சிவாயா தன்னுடைய குரு மானிட உருவில் இருப்பதையே விரும்பினார். ஏன் எனில் அப்பொழுதுதானே அவருக்கு சேவை செய்து கொண்டு இருக்க முடியும். அப்படிப்பட்ட நிலையை துறந்து விட்டுச் செல்லுமாறு அர்த்தம் தரும் குருவின் வார்த்தைகளை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதே சமயம் குருவிடம் முழுமையாக சரண் அடைந்துவிட்ட சிஷ்யரால் குருவின் கட்டளையை மீறவும் முடியவில்லை.

தனக்குக் கட்டளை இட்ட குகை நமச்சிவாயாவிடம் சிஷ்யர் கூறினார் "ஸ்வாமி, குருவுடன் வார்த்தை மோதல்களை ஒரு சிஷ்யன் தவிர்க்க வேண்டும். அதை செய்யாமல் இருந்தால் அது சிஷ்யனுக்கு அழகல்ல "

குகை நமச்சிவாயா கூறினார் " மகனே, நீ அறிவு ஜீவி என்பதினால், மனதில் நினைப்பதை தயங்காமல் கூறு "

அந்த சிஷ்யருக்கு தெளிவாக புரிந்தது. தான் வெளிப்படுத்திய சித்திகளையும், அவர் எடுத்த வாந்தியை தான் உண்டு விட்டதையும் கண்டு கொண்டு விட்டதினால்தான் குரு தன்னை சோதனைக்கு உள்ளாக்கி இருக்கின்றார்.

தன்னை விட்டு விலகிப் போய்விடும்படி குரு கூறிவிடுவாரோ என்ற மன பயத்தை வெளிப்படுத்தும் விதத்தில் சிஷ்யர் கூறினார், “ என் தெய்வமே, நமச்சிவாயா, சித்திகளை வெளிக் காட்டியவண்ணம் இருப்பவன் அப்படி செய்வதை நிறுத்தி விட்டால் அவனை உங்கள் பக்கத்திலேயே வைத்துக் கொள்ள சம்மதிப்பீர்களா?

அவருடைய பதில் மிக எளிமையாக அமைந்து விட்டது. மேலும் கூறினார் “ நான் வெளிப்படுத்தும் சித்திகளையும், அதிகமாக வெளிப்படுத்தும் குரு பக்தியையும் இனி வெளிக் காட்டாமல் இருந்தால் என்னை என்றும் உங்களுடனேயே இருக்க அனுமதிப்பீர்களா ? ”



சிஷ்யன் தான் வைத்த சோதனையில் வெற்றி பெற்று விட்டார் என்பதைக் கண்ட குரு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தான் படுத்திருந்த துாளியில் இருந்து குதித்து எழுந்து வந்தார் “ அப்பனே. என் இரு கண்கள் போன்றவனே, உண்மையிலேயே இன்றுதான் நீ உன்னுள் கொண்டுள்ள விவேகத்தை முழுமையாக வெளிக் காட்டி உள்ளாய். என்ன விந்தை இது. உன்னைப் போன்ற சிஷ்யர்கள் எவருக்குக் கிடைப்பார்கள்? ஆகவே இன்று முதல் நீ குரு நமச்சிவாயமூர்த்தி என்ற பட்டப் பெயரை உபயோகித்துக் கொள். ”

அதே சமயத்தில், அந்த மகிழ்ச்சி நிலையில் கூட தன்னுடைய சிஷ்யர் சிலகாலம் தன்னிடம் இருந்து விலக்கி இருக்க வேண்டியின அவசியத்தை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை.

சிஷ்யரை கட்டிப் பிடித்து அணைத்தபடிக் கூறினார் “ மகனே இரண்டு யானைகள் ஒரே இடத்தில் கட்டப்பட்டு இருக்கக் கூடாது. இது போக ஷேத்திரம் (அதாவது ஞானமும், நடத்தைகளும் ஒரே சமனில் அமைந்து உள்ள இடம்). சிதம்பரம் என்ற இடத்தில் உள்ள தெய்வ ஷேத்திரத்தில் மக்களின் அறியாமையை விலக்கி விவேகத்தைக் கொடுத்தருள அங்கு அம்பலவாணர் மேன்மையாக எழுந்தருளி உள்ளார். நீயும் அங்கு சென்று பல விதங்களில் மக்களுக்கு போதனைகள்

செயதவண்ணம் இருந்து ஆலய மேம்பாட்டிற்கும் செய்ய வேண்டிய வேலை பல உனக்கு இருக்கின்றது. போ, அங்கு போய் சில காலம் நீ இரு ”

சாதாரணமாக போகம் என்றால் பலவிதமான உல்லாசங்களை அனுபவித்தபடி வாழ்ந்து கொண்டு இருப்பது என அர்த்தம் ஆகின்றது. ஆகவே போக ஷேத்திரம் என்றால் உலக இன்பங்களை அனுபவித்துக் கொண்டு இருக்க முடிந்த இடம் என ஆகின்றது. ஆனால் அருணாசலா என்கின்ற அந்த புனித இடத்தினை பற்றி குரு அப்படி கூறி இருக்க முடியாது என்பதினால் அவர் கூறியதற்கு வேறு அர்த்தம் இருந்திருக்கலாம்.

குகை நமச்சிவாயா மூன்று தெய்வீக தன்மைகளில் எதாவது ஒன்றாக இருக்கும் வகையில் அப்படிக் கூறி இருக்கலாம். இதயம், அதாவது தெய்வீக மனநிலை மட்டுமே உள்ள இடம். போகம் அதாவது செயலும் அறிவும் ஒன்றிணைந்து செயல்படும் இடம். அதிகாரம் அதாவது செயல்களை மட்டுமே காட்டும் இடம்.



இதன்படி பார்த்தால் குகை நமச்சிவாயா கூறியது அருணாசலா என்ற இடத்தில் சிவபெருமான் பல்வேறு லீலைகள் புரிந்து கொண்டு பக்தர்களுக்கு தெய்வ அருள் புரிந்தபடி இருந்தவாறும், தன்னிடம் சரண் அடைந்து வருபவர்களை பந்தங்களில் இருந்து விடுதலை செய்தவண்ணமும் இருக்கின்றார் என்றாகின்றது . அதே சமயத்தில் சிதம்பரத்தில் அவருடைய சக்தியை வெளிப்படுத்திக் கொண்டும் பக்தர்களுக்கு தெய்வீக மனதை தந்தவாறும் இருக்கின்றார்.

இதனால்அதை விட இந்த இடம் உயர்வானது என்று அர்த்தம் கொள்ளக் கூடாது. தான் வெளிப்படுத்தும் பல ரூபங்களில் ஒன்றாக சிவபெருமான் சிதம்பரத்தில் வேறு விதமான உருவில் காட்சி தருகின்றார். சிவபெருமான் சிதம்பரத்தை தெய்வ ஷேத்திரம் எனவும் அருணாசலத்தை போக ஷேத்திரம் எனவும் குறிப்பிட்டுள்ளதை காணும் பொழுது அது உண்மைப் போலவே தோற்றம் தரும். சிவபெருமான் சிதம்பரத்தில் தன்னுடைய பக்தர்களை

இரட்சிக்க எழுந்தருளி உள்ள காட்சியைக் காணும் பொழுது ஒரு வேளை அருணாசலா ஒரு போக ஷேத்திரமோ என்று எண்ணக் கூடத் தோன்றும்.

இது குறித்து ”அனுதினமும் பகவானுடன்” (டிஸம்பர் மாதம், ஆறாம் தேதி, 1945) என்ற புத்தகத்தில் உள்ளது மற்றொரு விளக்கம். தேவராஜ முதலியார் என்பவர் ஒருமுறை பகவானிடம் அருணாசல மகாத்மியம் என்ற நூலில் உள்ள சில வரிகளைப் பற்றிக் கேட்ட பொழுது பகவான் அதை தமிழில் அழகாகக் கூறினார்.

அதன் கடைசி வரிகளில் அருணாசல சிவனை பற்றி பாடப்பட்டுள்ள பாடலில் சிவன் தன்னைப் பற்றிக் கூறியுள்ளது இது “ என்னுள் பல போக நிலைகள் ஆழமாக புதைந்து கிடக்கின்றன என்பதை அறிந்து கொள்”



தேவராஜ முதலியார் “ அவர் ( குகை நமச்சிவாயா ) குறிப்பிட்டுள்ள குகை என்பது தன்னுடைய உடலுக்குள் உள்ளதென்பதாகக் கூறுகின்றாரா, இல்லை கடவுள் என்றே கருதப்படும் மலைக்குள் உள்ளதாக கூறுகின்றாரா” என்று பகவானிடம் கேட்ட பொழுது பகவான் கூறினார் “ ஆமாம், அதன்படி இந்த மலையில் பல குகைகள் உள்ளன என்பது உண்மை. அவற்றில் சுகபோகம் தரும் அனைத்தும் அமைந்துள்ளன என்றே பொதுவான பொருள் தரும் ”

பகவான் தொடர்ந்து கூறினார் “ இந்த வரிகளில் காணப்படும் வார்த்தைகளின்படி அந்த மலை மகிழ்ச்சி தரும் அனைத்தும் உள்ள ஒரு குகை என்று நீ முதலில் நம்ப வேண்டும். “

நான் மீண்டும் கேட்டேன் “ அந்த இடத்தை ஒரு போக ஷேத்திரம் என்று நான் எதிலோ படித்திருக்கின்றேன். அதனால் இது இது அப்படி இருக்குமா என நான் வியப்படைகின்றேன். பகவான் கூறினார் “ ஆமாம், அது அப்படித்தான் (போக ஷேத்திரம்), ஆனால் அதனால் என்ன? இந்த ஷேத்திரத்தை நினைத்த மாத்திரத்திலேயே ஒருவனுக்கு முக்தி கிடைக்கின்றது எனும் பொழுது, இந்த ஷேத்திரத்தில் ஒருவர் விரும்பும் அனைத்து சுகபோகங்களும் கிடைக்கும் என்பதில் வியப்படைவதற்கு என்ன உள்ளது? ”

# பக்கம்
# 8



## குரு நமச்சிவாயா

## GURU NAMACHIVAYA

இனி கதை தொடருகின்றது. குகை நமச்சிவாயா தன்னுடைய சிஷ்யரை சிதம்பரத்திற்கு சென்று வசிக்குமாறு கூறினாலும், மீண்டும் அவர் வேண்டிக் கொண்டால் இங்கேயே தங்கிக் கொள்ள அனுமதிக்கலாம் என்றே மனதில் எண்ணி இருந்தார்.

சீஷ்யர் கூறினார் " இந்த அடிமை இங்கேயே இருந்து கொண்டு குருவின் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டே இருக்கவே விரும்புகின்றான். அவனால் வேறு இடத்திற்கு சென்று வசிக்க முடியாது, குருவின் பாதங்களில் சரண் அடைந்து விட்டதினால் இங்குதான் இருக்க முடியும். மேலும் தினம் தினம் குருவைப் பார்க்காமல் இந்த அடிமையினால் இருக்க முடியாது."

குகை நமச்சிவாயா அசைந்து கொடுக்கவில்லை. அவர் கூறினார் "சிதம்பர ஆலயத்தில் உள்ள அந்த தங்ககூடத்தில் சென்று என்னைப் போலவே தரிசனம் தரும் கடவுளின் தரிசனத்தை பெற்றுக் கொள். அவருடைய தரிசனம் அங்கு கிடைக்கவில்லை எனில் மீண்டும் இங்கு திரும்பி வந்துவிடு " வேறு வழி இல்லை.

தினமும் கடவுளின் தரிசனம் கிடைக்கும் என்ற உறுதி மொழி கொடுக்கப்பட்டு விட்டதினால் பகவானுடைய ( குரு நமச்சிவாயாவின் ) வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு விட்டது. " இந்த நல்ல அறிவுறையை ஏற்று நடக்கின்றேன் " என்று கூறிய பின் தன்னுடைய குருவின் பெருமைகளைக் கூறும் விதமாக கீழ் கூறப்பட்டுள்ள பாடலைப் பாடினார்.

ஓ, நமச்சிவாயா,
பிறப்பினால் ஏற்படும் நெருங்கிய பந்தங்களை
உங்களுடைய அறிவுறைகளினால்,
கருணையினால், அருட்பார்வையினால்,
உணர்வுகளால் மற்றும் தியானங்களினால்
நீங்கள் சாதுர்யமாக அழித்து விடுகின்றீர்கள்.
நான்காம் கால் பெற்று விட்ட நாற்காலி
தானே நிற்கத் துவங்க
நீங்களோ அங்கிருந்து
விடுதலை பெற்று சென்று விடுகின்றீர்கள்.

முதல் மூன்று நிலைகளாக விழிப்புணர்ச்சி, கனவு, மற்றும் தூக்கம் என்று அனைத்தும் இருக்க கடைசி வரிகள் *துரியா* எனும் நான்காம் நிலையை எடுத்துக் காட்டுகின்றது.

குகை நமச்சிவாயா அந்த நான்காம் நிலையில்தான் விடுதலை பெற்றுச் சென்று விடுகின்றார். ஆகவே இனியும் தாமதிக்கக் கூடாது எனக் கருதிய குகை நமச்சிவாயா " விரைவாக செயலைத் துவக்கு " என்றார். குரு நமச்சிவாயா சிதம்பரத்தை நோக்கி நடக்கலானார். பத்து மைல் கல் கடந்து இருப்பார். ஒரு மரத்தின் அடியில் தன்னை மறந்து சுமார் மூன்று மணி நேரம் அமர்ந்திருந்தார். அதன் பின் தனக்கு பசி எடுப்பதை உணர்ந்தார். அருணாசலேஷ்வர் ஆலயத்தில் சிவனுடைய துணைவியாக அமர்ந்து இருந்த உண்ணாமலை அம்மன் மீது துதி பாடலானார்.



உன் தலைவன் அண்ணாமலையின்
இருதயத்தைக் கவர்ந்த நாயகியே
உத்தமி உண்ணாமலை அம்மா
உன்னையே நினைத்தபடி இருந்து கொண்டிருக்கும்
இந்த அடிமைக்கு
எவர் வீட்டில் இருந்தாவது
உணவு கொண்டு வந்து தருவாயா

( உண்மையில் குரு நமச்சிவாயர் தன் பசியைத் தீர்க்குமாறு அம்பிகையிடம் வேண்டினார் என்பதே பொருள் )

குரு நமச்சிவாயா இப்படியாக பாடிக் கொண்டு இருந்த அதே வேளையில், அருகில் இருந்த ஆலயத்தில் தங்கத் தட்டு ஒன்றில் இனிப்பு சாதம் இறைவனுக்காக நேவித்தியமாக வைக்கப்பட்டு இருந்தது. கடவுளுக்கு பூஜை செய்து முடித்தப் பின் அந்த குருக்கள் மறந்து போய் அந்த தட்டையும் இனிப்பில் செய்திருந்த பிரசாதத்தையும் கோவிலுக்குள்ளேயே வைத்து விட்டு பூட்டிக் கொண்டு வீட்டிற்கு சென்று விட்டார்.

குரு நமச்சிவாயாவின் பாடலைக் கேட்டு கோவிலுக்குள் இருந்த உண்ணாமலை அம்மாள் அங்கிருந்த பிரசாதத்தை அதே தட்டுடன் எடுத்துக் கொண்டு போய் அவரிடம் தந்து விட்டு மீண்டும் கோவிலுக்குள் வந்து அமர்ந்துவிட்டாள்.

# பக்கம்
# 10



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

மதியம் ஆலயத்தை வந்து திறந்து பார்த்த குருக்கள் பயந்து போனார். தட்டும், அதில் இருந்த பிரசாதமும் காணவில்லை. அனைத்து இடங்களிலும் அதைத் தேடினார். ஊர் மக்களும் வந்து அந்த தட்டைத் தேடி தேடி சலித்துப் போய் எவரோ அதை திருடி விட்டார்கள் என்ற முடிவுக்கு வந்தனர்.

ஆனால் பூட்டப்பட்டு இருந்த கோவிலுக்குள் எப்படி ஒரு திருடன் நுழைந்து திருடி விட்டு வெளியேறி இருக்க முடியும் என்ற குழப்பமும் ஏற்பட்டது. அடுத்த எட்டு மணி நேரம் எந்த பூஜையும் அந்த கோவிலில் நடைபெறவில்லை. அனைவருடைய கவனம் அந்த தங்கத் தட்டை தேடுவதிலேயே இருந்தது.

அப்பொழுது அங்கிருந்த ஒரு பிராமணப் பையனுக்கு சாமி வந்து விட்டது. அவன் உடம்பில் சாமி ஏறிவிட்ட நிலையில் அவன் கூறினான் " சிதம்பரத்தை நோக்கி வந்து கொண்டு இருக்கும் குரு நமச்சிவாயா என்பவர் வழியில் ஒரு ஆல மரத்தடியில் இளைப்பாறிக் கொண்டு உள்ளார். அம்பிகைதான் அவருக்கு அந்த தட்டில் உணவு எடுத்துக் கொண்டு போய் தந்தாள். போங்கள், போய் அந்த தட்டை எடுத்து வாருங்கள் "

அவர்களும் அங்கு சென்று அந்த தட்டை எடுத்து வந்து மீண்டும் ஆலயத்தில் வைத்து விட்டனர். குரு நமச்சிவாயா காலையில் எழுந்தார். காலைக் கடன்களைக் கழித்துக் கொண்டு தன்னுடைய குருவை மனதார நினைத்தவண்ணம் கிழக்கு திசை நோக்கி நடை பயணத்தைத் துவங்கினார்.

ரிஷி வந்தனம் என்ற இடத்தை சென்று அடைந்தார். அங்குதான் சிவனும் பார்வதியும் அர்தநாரீஷ்வர் கோலத்தில் - பாதி ஆண், பாதி பெண் கோலத்தில் - எழுந்தருளி இருந்தனர். பண்டைய காலத்தில் முனிவர்களுக்கும் முனிவரான அகஸ்த்திய முனிவர் கூட அங்கு வந்துதான் அவர்களை வழிபட்டுக் கொண்டிருந்தார் என்பது ஐதீகம்.

அங்கிருந்த ஐயாயிரம் குண்டத்தில் குளித்தப் பின் பூஜைகளை முடித்துக் கொண்டார். மனம் லயித்து,

துாய்மையான எண்ணங்களுடனும் கடவுள் தரிசனம் செய்தார். அதன் பின் மீண்டும் அந்தக் குளத்தருகில் சென்று தன்னை மறந்த நிலையில் தியானத்தில் அமர்ந்தார். மீண்டும் பசி எடுக்க அம்பிகையை வேண்டிப் பாடலானார்.

*( இவை அனைத்தும் அருணாசல புராணம் என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டதே. பாடல்களும் முடிந்தவரை அதே அர்த்தத்தைத் தரும் வகையில் மொழி பெயர்கப்பட்டு உள்ளது. தமிழில் அவர் ”நிஷ்டையில் அமர்ந்தார் ” என்று எழுதப்பட்டு உள்ளது. சாதாரணமாக தன்னை மறந்த நிலை என்பதை தன்னைத் தவிற வேறு எதுவுமே மனதில் தோன்றாத நிலை எனக் கூறுவர். சமாதி நிலையைதான் ஒருவேளை அப்படிக் கூறி உள்ளனரோ என நினைக்கத் தோன்றுகின்றது. சமாதி நிலை என்பது யோக நிலையை குறிக்கும். குரு நமச்சிவாயா சாதாரண நிலையில் இருந்த பொழுது பார்த்திராத, தெரிந்திராத நிகழ்சிசிகள் அனைத்தும் நிஷ்டையில் இருந்த நேரத்தில் அவருக்குத் தெரியத் துவங்கியது. அதனால்தான் சில இடங்களில் தமிழில் நிஷ்டை என எழுதப்பட்டு இருந்ததை யோக நிலை என ஆங்கில மொழி பெயர்ப்பில் மாற்றி குறிப்பிடப்பட்டு உள்ளது)*



ஒரு தாயார் உயிருடன் இருக்கும் பொழுது
அவள் குழந்தை பசியோடு இருக்க முடியுமா
நீ இந்த உலகில் இருக்கும் பொழுது
நான் பசியால் வாடிக் கொண்டு இருக்க வேண்டுமா
அனைத்து தேவர்களும் புகழ் பாடும் உன்னை
மெல்லிய மூங்கில் போன்று
தோள்களைக் கொண்ட உன்னை
இரண்டு காதிலும்
தேவலோக முத்துக்கள் மின்னும் உன்னை
எனக்கு உணவு கொண்டு வந்து தருவாயா
என பிச்சை கேட்கிறேன்.

குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

அந்த பாட்டைக் கேட்ட அன்னை வெளியில் வந்து அவரிடம் கேட்டாள் ”மகனே இங்கு நானும் சிவபெருமானும்

சேர்ந்தே எழுந்தருளி இருக்கையில் என்னை மட்டுமே நீ போற்றி துதி பாடுவது சரியாகுமா? ஆகவே என்னையும் அவரையும் இணைத்து ஒரு பாடலைப் பாடு ”

குரு நமச்சிவாயா அதை ஏற்றுக் கொண்டு பாடத் துவங்கினார்:-

காதுகள் இரண்டிலும்
தேவலோக முத்துக்கள் மின்ன
சிவபெருமானுடன் எழுந்தருளினாய்
கறுத்த மேகம் போல் அவர் தொண்டை
மின்னலைப் போல ஒளி கொடுக்க
தங்க நிறத்தை விட
அதிக பளபளக்கும் நீ
கல் போன்ற என் இருதயத்தில்
மலைபோல எழுந்தருளினாய்
உன்னை நான் வேண்டுகிறேன்
என் பசி தீர உணவு தருவாயா

அவர் பாடி முடித்ததுதான் தாமதம், எங்கிருந்தோ உணவு கொண்டு வந்து தானே அவருக்கு தந்தாள் அந்த அன்னை. அதை உண்ட பின் விருத்தாசலம் என்ற புனிதத் தலத்தை நோக்கி நடக்கலானார். அங்கு சென்ற பின் மணிமுத்தாறு நதியில் குளித்து விட்டு பழமலைநாதர் மற்றும் பெரியநாயகி என்ற பெயரில் அங்கு எழுந்தருளி இருந்த சிவன்- பார்வதியை வணங்கிவிட்டு, திரும்பவும் அதன் ஆற்றுக் கரைக்குச் சென்று அங்கே அமர்ந்து கொண்டார்.

அங்கு சென்று அமர்ந்தவர் தன்னை மறந்தார், யோக நிலைக்குச் சென்றார். மீண்டும் பசி எடுத்தது. அந்த ஊரில் வயதானவள் தோற்றத்தில் இருப்பதாக கருதப்பட்ட பெரியநாயகி என்ற அம்மனை வேண்டிப் பாடலானார்.

பெரியநாயகி எனும் பெயர் கொண்ட மூதாட்டியே
கருணை மனம் கொண்டவளே
என்றும் சிவபெருமானுடன்
இணைந்தே உள்ள மூத்தவளே
கருநீல நிறத் தோற்றம் கொண்டவளே



# பக்கம்
# 13

மலைபோல என் எதிரில் நிற்கும் மூதாட்டியே
உன்னை வேண்டிக் கேட்கின்றேன்,
எனக்கு உணவு கொடுப்பாயா

அப்படி அவர் பாடி முடித்ததும் கையில் ஒரு சிறு கம்புடன் வயதான ஒரு மூதாட்டி குரு நமச்சிவாயாவின் முன்னால் வந்து நின்றாள்.

“ அன்பு மைந்தனே, மீண்டும் மீண்டும் என்னை நா வலிக்க வயது முதிர்ந்தவளே, மூதாட்டியே என்று கூறி துதி பாடுகின்றாயே, அது சரியா ? மூதாட்டியால் நடக்க முடியுமா, தண்ணீர் கொண்டு வந்துத் தர முடியுமா இல்லை உணவுதான் கொண்டு வர முடியுமா ? ” என்று கேட்டாள்.

குரு நமச்சிவாயா கூறினார் “ அன்னையே பால காசியில் ( புதிய காசி ) நீ பாலாம்பிகையாக உள்ளாய். இந்த இடம் விருத்தகாசி (பழைய காசி ) எனப்படுவது. இங்கு நீ பெரியநாயகி என்ற உருவில் உள்ளாய். உன்னுடைய நாதன் கூட இங்கு பழமலைநாதர் என்றுதான் அழைக்கப் படுகிறார். (பழங் காலத்தைய மலை என்ற பொருளில்). அதனால்தான் உன்னை அப்படி நான் அப்பெயரில் அழைத்துப் போற்றினேன்.

அன்னை கூறினாள் “ அது எப்படியோ இருக்கட்டும். இப்போது என்னை இளமையானவளாகக் கருதி ஒரு பாடலைப் பாடு ”

“அப்படி எனில் நான் உன்னை இரண்டு அன்னைகளாக பாவித்துப் பாடுவேன் சரியா ” என்று குரு நமச்சிவாயா கேட்டார்.

“ அது பற்றிக் கவலை இல்லை. இப்போது நான் இளமை கோலத்தில் உள்ளவளாக எண்ணிப் பாடு ” என்று அன்னை பெரியநாயகி கூறினாள்



குரு நமச்சிவாயா மற்றொரு பாடலைப் பாடினார்:-

மணிமுத்தாறு நதியினால் சூழப்பட்ட
மலை மீது எழுந்தருள்பவளே
உன் பெருமைகளைப் பாடி
உன் கால்களில்

குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

சரணம் அடைந்த பக்தர்களுக்கு
சிவபெருமான் அருகில் அமர்ந்து
காட்சி அளிப்பவள் நீ
ஜொலிக்கும் கற்கள் கொண்ட நகைகள் யாவும்
என்றுமே இளமையான காட்சி தரும்
உன் மார்பகங்களை அலங்கரிக்க
இளமை ஊஞ்சலாடும் உன்னை நான் வேண்டுகிறேன்
பசி எடுக்கும் என் வயிற்றுக்கு
உணவு கொண்டு வருவாயா

அவர் பாடிக்கொண்டே இருக்கையில் அன்னை பாலாம்பிகா உருவில் வந்து அவருக்கு உணவு தந்தாள். அதை உண்ட பின் அவர் புவனகிரி என்ற இடத்தை நடந்தே சென்றடைந்தார்.



அங்கிருந்தபடியே பார்த்த பொழுது அவர் செல்ல வேண்டிய இடமான சிதம்பரம் தெரிந்தது. நான்கு கோபுரம் கொண்ட ஆலயத்தைக் சிதம்பரத்தில் கண்ட அவர் மகிழ்ச்சி பொங்க தன்னை மறந்த நிலையில் அதன் மீதும் ஒரு பாடலைப் பாடினார்.

அந்த நான்கு கோபுரங்களை
நான் தரிசித்த அந்த கணமே
நெருப்பில் விழுந்து விட்ட பஞ்சைப் போல
என்னுடைய பாபங்களும் அழிந்தன
தில்லை திடல் நாயகனே
அனைவருடைய கண்களும்
இனிய ஒலி தரும் சலங்கை அணிந்த
உன் பொன்னிறப் பாதங்களை வணங்க
பாலைவனம்தான் அவர்கள் வாழ்வில்
காட்சியும் இனித் தருமோ?

சிதம்பரத்தை நோக்கி இப்படி பாடிக் கொண்டே நடந்து கொண்டிருந்தவர் அங்கு சென்றதும் சிவகங்கா நதியில் குளித்தப் பின் அன்னை மீது இன்னும் ஒரு பாடலைப் பாடினார்:-

பழமைத் தமிழில் பாடல் பாடி
இக்குளத்தில் நீராடி

புனிதம் பெற்ற அன்னை சிவகாமி போல
பெற்ற பாபம் அனைத்தையும்
அழித்து ஒழிக்கும்
இந்த புனித நீரை
கையில் ஏந்தினால்
பாபம் அனைத்தும்
சூறையாடப்படுவது திண்ணம்

சிதம்பரம் கோவிலில் இருந்த சிவகாமி என்ற பெண் சிவனால் விரும்பப்பட்டவள் அல்லது அவரை விரும்பியவள். அவள் சிவபெருமான் தாண்டவம் ஆடுவதை மௌனமாக நின்று பார்த்து இரசித்தவள். சிதம்பரத்தை பற்றி கூறப்படும் புராணக் கதையில் சிவகாமி என்ற பெண் எப்படி சிவபெருமானுடைய அருளைப் பெற்று தன் பாபத்தைத் களைந்தாள் என்பது குறிப்பிடப்பட்டு உள்ளது.



இந்த ஆலயம் எழுப்பப்படுவதிற்கு முன் தில்லை காட்டில் காளிக்கு ஒரு ஆலயம் இருந்தது. சிவபெருமான் சிதம்பரத்தில் ஆனந்தத் தாண்டவம் ஆடிக் கொண்டு இருந்த பொழுது தலை கனம் ஏறிய காளி அங்கு சென்று தன்னுடன் நடனப் போட்டியில் பங்கேற்க முடியுமா என அவரிடம் சவால் விட்டாள். அவளுடைய திமிரை அடக்க எண்ணிய சிவபெருமான் அதற்கு ஒரு நிபந்தனை போட்டார். இருவரில் எவர் அந்த போட்டியில் வெல்வார்களோ அவர்களே தில்லைக்கு அதிபதீ. அந்தப் போட்டியில் தோற்பவர் தில்லையை விட்டு வெளியேறி விட வேண்டும்.

நடனம் துவங்கிற்று. அனைத்து தேவர்களும் தெய்வங்களும் அந்த கூடத்தில் சூழ்ந்து நின்றிருந்தனர். நடனப் போட்டியின் இடையில் திடீர் என சிவபெருமான் தன்னுடைய ஒரு காலை ஆகாயத்தை நோக்கி நீட்டியபடி நடனம் ஆட, ஒரு பெண்ணினால் அப்படி கால்களை உயரே தூக்கிக் காட்டி அவமானமுற முடியாது என்பதினால் காளி தோற்றாள். ஆகவே அவள் தில்லைக் காட்டில் இருந்து வெளியேற வேண்டியதாயிற்று. சிவபெருமானிடம் தோற்றுப் போன காளி தில்லையில் இருந்த குளத்தில் குளித்து விட்டு அவரை வணங்கி நின்று தன்னுடைய பாபத்தைக் களைந்து

கொண்டாள். அவளுடைய ஆக்ரோஷம் மறைந்து சாந்தமாக மாறிவிட தில்லை காட்டில் அமர்ந்துள்ள பெரும் அன்னை என்ற பெயர் பெற்றாள்.

அதனால்தான் தன்னுடைய பாடலில் குரு நமச்சிவாயாவும் எப்படி காளி அந்த குளத்தில் குளித்து விட்டு தன் பாபங்களைக் களைந்து கொண்டாளோ அப்படியே அவைரும் தம்முடைய பாபங்களைக் களைந்து கொள்ள அவள் செய்த அதே காரியத்தை ( அதாவது குளத்தில் குளித்து விட்டு சிவனை வணங்குவது ) உதாரணமாக்கிக் கொள்ள வேண்டும் என்று உணர்த்தி உள்ளார்.

ஆலயத்துக்குள் நடக்கும் நடனப் போட்டிகள் நிருத்திய சபா என்ற பெயரில் போட்டி நடந்த இடத்தில் நடத்துகின்றனர். அங்கு ஊர்த்துவ தாண்டவம் ஆடும் காட்சியில் எட்டு கைகளைக் கொண்டு சிவபெருமான் காட்சி தருகின்றார்.



மேலே தொடரும் முன் சிதம்பரத்து ஆலயத்தைப் பற்றி சிறிது தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆலயத்தில் உள்ள கற்பக்கிரகம் “சித் சபா” அதாவது விழிப்புணர்சிக் கூடம் என்று அழைக்கப்பட்டதினால் இந்த ஊரின் பெயரும் சிதம்பரம் என ஆயிற்று. இங்குதான் ஆகாச லிங்கமும் (அதாவது அகண்ட வெளியில் இருந்தவாறு விழிப்புணர்வை அருளிக் கொண்டே இருக்கும் சூனியவெளியில் உள்ள ஒளி போல காட்சி தரும் லிங்கம்) பித்தளை உலோகத்தில் செய்யப்பட்டுள்ள பெரிய நடராஜர் சிலையும் உள்ளன.

அதன் எதிர்புறத்தில்தான் தங்க கூடம் என குரு நமச்சிவாயா அழைத்த கனக சபா என்ற மண்டபம் உள்ளது. இரண்டாவது பிராகாரத்தில் காளி மற்றும் சிவன் இருவரும் போட்டி நடனம் ஆடிய நிருத்திய சபா இருக்க, மூலஸ்தானத்தில் கிழக்கு திசை நோக்கியபடி அமைந்துள்ள சிவலிங்கம்தான் அந்த ஆலயத்தில் முதன்மையானது. இந்த ஆலயத்திற்கு நடராஜர் வந்து எப்படி பேரானந்த நடனம் ஆடினார் என்ற கதையை பிறகு பார்க்கலாம்.

குரு நமச்சிவாயா சிவகங்கை தீர்த்தத்தில் குளித்தப் பின் ஆலயத்திற்கு சென்று உள் பிராகாரத்தில் நடராஜரை

தரிசனம் செய்ய விரும்பினார். ஆனால் உள் பிராகாரத்தில் எதிர் பாராத விதத்தில் அருணாசலத்தில் இருந்த அவருடைய குருநாதர் குகை நமச்சிவாயா வந்து காட்சி தந்து வியப்பூட்னார். அதனால் மனம் மகிழ்ந்து போன குரு நமச்சிவாயா உடனேயே அங்கு ஒரு பாடலைப் பாடினார்:-

தங்கக் கூடத்தின் அதிபதியே,
சொர்க லோகத்தின் மன்னனே
உன்னைப் போற்றிப் எவர் துதித்தாலும்,
எப்படித்தான் துதித்தாலும்,
அவர்கள் ஆன்மீகத்தில் ஈடுபட்டவர்களோ,
இல்லை சாதாரண பக்தர்களோ,
அவர்களுக்கெல்லாம் கேட்டது அனைத்தையும்
நீ தருகிறாய்.
அப்படி இருக்கையில்
புனித அண்ணாமலையில் நீ எனக்கு
குருவாக, குகை நமச்சிவாயாக எழுந்தருளி
உன் இரு கமலப் பாதங்களையும்
இந்த துர்பாக்கியசாலியான
பக்தனின் தலை மீது பதித்து
அருள்மழையை ஏன் பொழிந்தாய் என்பதை
நினைத்துப் பார்த்த பொழுது
உன்னை என்னால்
புரிந்து கொள்ளவே முடியவில்லை



அவருடைய குரு எப்படி எழுந்தருளி அவருக்குக் காட்சி தந்தார் என்பதை ஒரு கவிதை வடிவில் தன் சுயசரிதையில் எழுதியது இது :-

தங்க நிறத்தில் ஜொலித்தபடி
இந்த இடத்தில் வாழும் கடவுள்
சத்குருவாக தோற்றம் தந்தார்.

மன மயக்கம் தெளிந்து எழுந்தவர் எண்ணினார் " இனி இந்த இடத்திலேயே நான் வசிக்கத் துவங்கினால் (அவருடைய குருநாதர் குகை நமச்சிவாயா வந்து காட்சி தந்து விட்டதினால் மனக்குழப்பம் நீங்கியது) எனக்கு என்ன தீமை வந்து விடப் போகின்றது ? " அனைத்தையும் மனக்

பக்கம் 18



குரு நமச்சிவாயா

GURU NAMACHIVAYA

கண்ணால் ஆராய்ந்தவர் மனம் இன்னும் தெளிவு பெற்றது.

அந்த பேரானந்த நிலையில் அடுத்த அரை மணி நேரத்தில் இன்னும் நூறு பாடல்களை சிவபெருமான் மீது இயற்றினார். அதன் பின்னர் அந்த ஆலயத்தில் ஒதுக்குப் புறமாக இருந்த ஒரு இடத்தில் சென்று தன்னை மறந்து அமர்ந்திருந்தார்.

குரு நமச்சிவாயாவிற்கு குகை நமச்சிவாயா முன்பு ஒருமுறைக் கூறி இருந்தார். தான் அவருக்கு அந்த இடத்தில் வந்து குகை நமச்சிவாயாவாக காட்சி தராவிடில் திரும்பவும் அருணாசலத்திற்கே அவர் திரும்பி வந்து விடலாம். ஆகவே அவர் அங்கு வந்து காட்சி கொடுத்து விட்டதினால் இனி குரு நமச்சிவாயா சிதம்பரத்தில் தங்கி இருந்து கொண்டு குகை நமச்சிவாயா தந்திருந்த கட்டளையை நிறைவேற்றி ஆக வேண்டும். சிவபெருமானே ஆலய அதிகாரிகளிடம் குரு நமச்சிவாயா யார் என்பதையும், அவர் எதற்காக அங்கு வந்துள்ளார் என்பதையும் விளக்கிக் கூறியதாக கதை அமைந்து உள்ளது.

அந்த கால கட்டத்தில் சிதம்பர ஆலயத்தில் பணி புரிய மூவாயிரம் பிராமண குருக்கள் அதிகாரம் பெற்று இருந்தனர். அவர்கள் அனைவரும் அந்த அதிகாரம் எப்படிக் கிடைத்து பணி புரிய அனுமதிக்கப்பட்டு இருந்தனர் என்ற கதை உள்ளூர் புராணக் கதையையும் நம்பிக்கைகளையும் அடிப்படையாக வைத்து எழுதப்பட்டு உள்ள சிதம்பர மகாத்மியம் என்ற நூலில் விளக்கிக் கூறப்பட்டு உள்ளது.

வடநாட்டில் ஆட்சியில் இருந்த ஹிரன்யவர்மன் என்ற மன்னன் தனக்கு வந்திருந்த வெண் குஷ்ட நோய் சிவகங்கை தீர்த்தத்தில் குளித்த பின் குணமடைந்து விட்டதினால் மகிழ்வுற்று அந்த ஆலயத்தை புதுப்பித்துத் தர விரும்பி அதற்கான ஏற்பாடுகள் செய்தான். அவன் தெற்கில் இருந்து ஒரு காலகட்டத்தில் எதோ ஒரு நிகழ்ச்சியினால் வடநாட்டிற்கு சென்று வசித்துக் கொண்டு இருந்த மூவாயிரம் தீட்சதர்கள் ( 3,000 ) என்ற பெயரில் அழைக்கப்பட்ட பண்டிதர்களை அந்தப் பணி புரிய தன்னுடன் அழைத்து வந்திருந்தான்.

அங்கு வந்தப் பின் வந்திருந்தவர்கள் எத்தனை தீட்சிதர்கள் என எண்ணி பார்த்தவனுக்கு ஒரே வியப்பு.

அழைத்து வரப்பட்டிருந்த மூவாயிரம் தீட்சதர்களில் ( 3,000) இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று ஒன்பது தீட்சதர்களே ( 2,999 ) அங்கு இருந்தனர். இன்னொருவர் எங்கே ? அதனால் சிவபெருமானே ஒரு பண்டிதராக மாறி அந்த எண்ணிக்கையை மீண்டும் மூவாயிரம் என மாற்றினாராம்.

இப்படி ஒரு கதை சிதம்பரத்தைச் சுற்றி வந்திருப்பதின் காரணம் சிதம்பரம் ஆலயத்தில் சைவ அகமங்களிபடி பூஜைகள் செய்யப்படுவது இல்லை என்பதினால் இருக்கலாம். பதஞ்சலி என்ற முனிவர் எழுதி உள்ள நூலில் கூறப்பட்டு உள்ளது போலத்தான் அங்கு அனைத்து பூஜைகளும் நடை பெறுகின்றன. அந்த நூலினை ஹிரன்யவர்மன் அழைத்து வந்த வடநாட்டு தீட்சதர்கள் தங்களுடன் கொண்டு வந்திருந்தனராம்.



இதனால் சிதம்பரம் ஆலயத்தின் பெருமைக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை. மாறாக பல சைவர்கள் சிதம்பரத்தை மிகப் புனிதமான ஆலயம் என்றே கருதுகின்றனர். அந்த ஆலயத்தை லட்சக்கணக்கான சைவர்கள் அழகான தமிழில் “கோவில” என்று அழைப்பதே அதற்குச் சான்று ஆகும். அவர்களைப் பொறுத்தவரை அந்த ஆலயத்திற்கு வேறு அடை மொழிப் பெயர் தேவை இல்லை.

குரு நமச்சிவாயா சிதம்பர ஆலயத்திற்கு சென்றிருந்த பொழுது அதை நிர்வாகித்து வந்தவர்கள் ஜுவன் முக்தா, ஜடமுக்தா மற்றும் மஹாமுக்தா என்ற மூன்று பேர்கள் ஆவர். அவர்களுடைய நீண்ட நாளைய அனுபவம் மற்றும் வயது முதிர்ச்சியினை மனதில் கொண்டு மற்றவர்கள் அவர்களை பல்லக்குகளில் தூக்கிச் செல்வார்கள். அவர்களுக்கு முன்பாகதான் சிவபெருமானே தோன்றி கூறினாராம் ,

“அருணாசலத்தில் இருந்து மாபெரும் ஒரு மனிதர் இங்கு வந்து உள்ளார். அவர் எப்பொழுதும் யோக நிலையில் இருப்பவர். அதற்கு உதவியாக இருக்க எவருமற்ற ஒரு தனி இடத்தை அவருக்கு நீங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

# பக்கம்
# 20



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

அவர் பல புனித காரியங்களை என் சார்பில் செய்ய வேண்டி உள்ளது. அவரை எங்கு தங்க வைப்பது என நீங்கள் கேட்கின்றீர்களா ? திருவாசகம் எழுதிய மாணிக்கவாசகராக இருந்த பொழுதும் மற்றொரு முறை உபமன்யூவிற்கு கடலில் இருந்து பால் கொண்டு வந்து தந்த பொழுதும் நான் காலடி வைத்த இரண்டு இடங்கள் வடக்குப் பக்கத்தில் ஆலயத்திற்கு வெளியில் உள்ளன. அங்கே அவரை அழைத்துச் செல்லவும் ”

வியாக்கிரபாதா என்ற முனிவரின் மகனான உபமன்யூ பற்றிய கதை மகாபாரதத்தில் உள்ளது. அவனுக்கு பால் மிகவும் பிடித்த பானம். ஆனால் அவர் இருந்த காட்டு பர்ணசாலையில் இருந்த அவருக்கு அது கிடைக்கவில்லை. அவர் தன்னுடைய தாயாரிடம் ஒரு முறை பால் தருமாறு கேட்ட பொழுது அவளால் அதை தர முடியவில்லை. அவரிடம் தாங்கள் மிகவும் பண்டைய கால வாழ்க்கை முறையில் வாழ்ந்து வருவதால் அப்படிப்பட்ட அனைத்து தேவைகளுக்கும் சிவனையே எதிர் பார்த்துக் கிடப்பதாகவும் கூறினாள். அவர் அந்த சிவன் என்பது யார் எனவும் அவருடைய அருளை எப்படிப் பெறுவது எனவும் அவளிடம் கேட்க, அவருடைய தாய் அவருக்கு எப்படி தியானம் செய்வது எனக் கற்றுத் தந்தாள். ஆனால் தன்னுடைய மகன் குடிப்பதற்குப் பால் வேண்டும் என்ற விருப்பத்தை மனதில் வைத்திருந்தே தியானம் செய்கின்றான் என அவளுக்குத் தெரியாது.

அந்த சிறுவன் தியானத்தில் தலை சிறந்து விளங்க் சிவன் அவன் முன் பிரசன்னமாகி “ குழந்தாய் உபமன்யூ. நீ முனிவனாகி விட்டாய். உன் தவததைக் கண்டு நான் மனம் மகிழ்ந்து போனேன். நீ என் சிறந்த பக்தனாகி விட்டாய், பிரும்மரிஷியாகப் போவாய். என்றும் அழியாத இளமையும், அழகான் தோற்றத்துடனும் நீ இருந்து கொண்டு இருப்பாய். உனக்கு எப்பொழுதெல்லாம் வேண்டுமோ அப்பொழுதெல்லாம் கிடைத்துக் கொண்டே இருக்க இங்கு கடல்போல பால் குளம் இருக்கும். உன்னுடைய உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களுடன் ஆனந்தமாக நீ வாழ்ந்து கொண்டு இரு.

சிதம்பரத்தில் இந்த நிகழ்ச்சி நடந்ததாக

கூறப்படுகின்றது. ஆலயத்தின் வெளியே வடக்குப் பகுதியில் உள்ள திருப்பாற்கடல் என்ற சிறு குளம் இதனால் தெய்வீக பால் குளம் எனற பெயர் பெற்றது. அதை ஒட்டி உள்ள மடத்தில் தங்கியபடித்தான் ஒன்பதாம் நூற்றாண்டில் சிவ பக்தனாக இருந்து வந்த மாணிக்கவாசகர் திருவாசகத்தில் காணப்படும் பல பாடல்களை எழுதினார்.

ஆகவே சிவனார் கூறியபடியே அந்த பண்டிதர்கள் குரு நமச்சிவாயாவிடம் சென்று அவரை அந்த திருப்பாற் கடல் பகுதிக்கு அழைத்துச் சென்று அங்கே தங்க வைத்த விட்டுத் திரும்பினர்.

அங்கு சென்ற பின் எப்பொழுதும் போல தன்னை மறந்த நிலையில் அமர்ந்திருந்த குரு நமச்சிவாயாவுக்கு பசி எடுத்தது. பார்வதியை உணவு கேட்டு பாடத் துவங்கினார்.



எனது அன்னை சிவகாமியை
தித்திப்பான தேன் போன்ற
வார்த்தைகளைக் கொண்டு
அறிஞர்கள் போற்றிப் பாடுவர்
தேவலோகத்து மண்ணில்
காலடி பதிக்கும்
உன் தங்கப் பாதங்களில்
நான் சரணம் அடைகிறேன்
சதைப் பிண்டத்தினால் ஆன
இந்த கட்டை
பசியினால் வாடாமல் இருக்க
உன்னை வேண்டிக் கேட்கின்றேன்,
எனக்கு உணவு கொடுப்பாயா

அந்தப் பாடலை அவர் பாடி முடித்தப் பின் அன்னை அவருக்கு உணவு கொண்டு வந்துத் தந்தாள். அது மட்டும் அல்ல அவளே ஒரு பாடலைப் பாடினாள்.

பண்டைய காலங்களில்
பல பெண் அசுரர்களின் மார்பகங்களில் இருந்து
பால் குடித்து
பரவசம் அடைந்தவள் நான்*
மாபெரும் கடவுளின் தங்கையும்

குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

சிவகாமி என்ற நானேதான்
குகை நமச்சிவாயா என்ற
அடிமையின் பசி தீர
உணவு கொண்டு வந்துள்ளேன்

( * இந்த இடத்தில் நான் என அவள் குறிப்பிட்டது கிருஷ்ணரைதான். அவரைக் கொல்லும் நோக்த்துடன் பூதானா என்ற அரக்கி முலைப் பால் கொடுக்க வந்தவள் போல வேறு உருவில் வந்து அவரைக் கொல்ல முயற்சிக்க அவள் மார்பகத்தில் இருந்து பாலை உறிஞ்சி அருந்திய பின் அவள் உயிரையும் உறிஞ்சி எடுத்து விட்டார் )

அன்று முதல் இருந்து தினமும் சிவகாமி அவருக்கு உணவு கொண்டு வந்துத் தரத் துவங்கினாள். அவரும் அங்கு அமர்ந்து இருந்தபடியே தியானத்தில் மூழ்கிக் கிடந்தார். அந்த நிலைகளில் அவர் அமர்ந்து இருந்த பொழுது அங்கு அடிக்கடி வந்து சென்றவர்கள் அவர் ஒரு மாபெரும் தெய்வீக சக்தி வாய்ந்த மனிதர் என எண்ணிக் கொண்டு அவர் எதிரில் பணத்தை காணிக்கைப் போல் போட்டு விட்டுச் சென்றனர். சில நாட்களில் அவர் எதிரில் பணம் குவிந்து விட கண் விழித்தப் பின் பணத்தை நோக்கிய குரு நமச்சிவாயா “ இந்தப் பொருள் ஆசைதான் ஒருவனை அழிக்கிறது ” என்றார்.



அந்த நேரத்தில் அங்கிருந்த மக்களைப் பார்த்து அதை அப்படியே எடுத்துக் கொள்ளுமாறும் கூறி விட்டார். அதைக் கண்ட மூவாயிரம் பண்டிதர்களும் அனாவசியமாக அத்தனை பொருளும் உபயோகம் இன்றிப் போய் விட்டதே என வருத்தம் அடைந்தனர். குரு நமச்சிவாயாவிடம் வேறு இடத்திற்கு சென்று யோக நிஷ்டையில் இருக்குமாறு வேண்டினர்.

அவர்கள் அவரிடம் வேண்டினார்கள் “ ஆலயத்தின் வெளியில் நீங்கள் அமர்ந்து கொண்டு உள்ளதால் உங்களுக்கு வரும நன்கொடை அனைத்தையும் மற்றவர்கள் கொண்டு சென்று விடுகின்றனர். ஆகவே நீங்கள் ஆலயத்தின் உள்ளே வந்து அமர்ந்து கொண்டால் உங்களுக்கு போடப்படும் காணிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டு

பல்வேறு நல்ல காரியங்களுக்கு பயன் படுத்த முடியும். ஆகவே தயவு செய்து ஆலயத்தின் உள்ளே வந்து அமர்ந்து கொள்ளுங்கள் ”

“ அந்த சிதம்பரக் கடவுளின் கட்டளையை ஏற்று நான் இங்கு வந்து அமர்ந்தது இருக்கும் பொழுது என்ன காரணத்தைக கூறி இந்த இடத்தை விட்டு நான் வெளியேற முடியும் ? ” என்று குரு நமச்சிவாயா அவர்களிடம் கேட்டார்.

அந்த மூவாயிரம் பண்டிதர்களுக்கும் புரிந்தது , நாம் எத்தனைதான் கூறினாலும் அவர் அங்கிருந்து வர மாட்டார். ஆகவே மூத்த மூன்று பண்டிதர்களும் சிவபெருமானன் துணையையே நாட வேண்டும்.

அவர்களும் சிவபெருமானிடம் குரு நமச்சிவாயா ஆலயத்திற்குள் வந்தால் நிறைய நன்கொடை கிடைக்கத் துவங்கும் எனவும் அதைக் கொண்டு பல நல்ல காரியங்களை நடத்தலாம் எனவும் கூறிவிட்டு ஆனால் குரு நமச்சிவாயா அதற்கு மறுக்கின்றார் என வேண்டிக் கூற அவர் கூறினார் “ஆமாம். அதுவும் நல்ல காரியமே. ஆனால் நீங்கள் போய் மீண்டும் அழைத்தாலும் அவர் வர மாட்டார். ஆகவே நானே போய் அவரை அழைத்து வருகின்றேன் ”



ஆகவே சிவபெருமானே ஒரு வீர சைவ பிரிவைச் சார்ந்த துறவி போல உருவம் கொண்டு கையில் ஒரு கமண்டலம் மற்றும் தண்டத்தை ஏன்றியவாறு குரு நமச்சிவாயா அமர்ந்து தியானம் செய்து கொண்டு இருந்த இடம் சென்று அவர் முன்னால் நின்று கொண்டார்.

யோக நிலைக் கலைந்து கண் விழித்த குரு நமச்சியா வயதான அந்த துறவியைக் கண்டு ஆனந்தம் கொப்பளிக்க “உங்கள் பாதங்களை தலை வைத்து வணங்குகின்றேன்” என்றார்.

மேலும் “நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்” என்று கேட்டார் குரு நமச்சிவாயா .

“ நாம் தில்லைவனத்தில் ( சிதம்பரத்தின் மற்றொரு பெயர் ) வசிக்கின்றோம் ” என்றார் வந்தவர்

“உங்கள் பெயர் என்ன” என்று கேட்டார் குரு நமச்சிவாயா .

“எம் பெயர் அம்பலத்தாடுவார் ” என்றார் வந்தவர்

“ இங்கு எதற்காக வந்தீர்கள் ” குரு நமச்சிவாயா கேட்டார்.

துறவி கூறினார் “ எனக்கு சிறிது உணவு கிடைக்குமா எனப் பார்க்க வந்தேன்? நான் பல இடங்களுக்கும் சென்று கேட்டேன். கிடைக்கவில்லை. ஆனால் அவர்கள் உங்களிடம் சென்று கேட்டால் அது கிடைக்கும் என்று கூறி விட்டதினால் இங்கு வந்தேன் ”

“எனக்கு தினமும் அன்னை பார்வதிதான் உணவு கொண்டு வந்து தருகின்றாள். என்னிடம் வேறு பாத்திரம் கூட இல்லையே ” என்றார் குரு நமச்சிவாயா.

ஆகாயத்தில் இருந்த சந்திரனைக் காட்டிய துறவி கூறினார் “ பாத்திரம் அதோ உள்ளதே ”

குரு நமச்சிவாயா அன்னை வந்து கொண்டிருந்த ஒரு குறிப்பிட்ட திசையை நோக்கினார். அடுத்த கணம் உணவு வந்து விட்டது.

“ இதை எடுத்துக் கொள்ளுங்கள் ” என்றார்.

“ நான் அதை எடுத்துக் கொள்ள மாட்டேன் ” என்ற துறவியிடம் “ ஏன் ?” என்று கேட்ட குரு நமச்சிவாயாவிடம் “எனக்கு தினமும் நீ இப்படி உணவு தரச் சம்மதித்தால்தால்தான்* நான் இதை எடுத்துக் கொள்வேன்” என்றார்.

(* குரு நமச்சியாவுக்கு வந்திருந்தவர் யார் என்பது தெரியவில்லை. தினமும் தனக்கு உணவு வேண்டும் என்று அவர் கேட்டதின் அர்த்தம் என்ன என்றால் அந்த ஆலயத்தில் தினமும் பிரசாதம் படைக்க வேண்டும என்பதே. அதை பின்னர்தான் குரு நமச்சிவாயா உணர்ந்து கொண்டார். ஆனால் முதலில் அவர் ஏற்பாடு செய்த நன்கொடை வேறு வகையான உபயோகத்துக்கு சென்று விட்டது )

குரு நமச்சிவாயா கூறினார் “ நீங்கள் மிகவும் வயதானவராக இருக்கின்றீர்கள். நானோ காசி, இராமேஸ்வரம் போன்ற இடங்களுக்கெல்லாம் போய்க் கொண்டு இருப்பவன். என் பக்கத்திலேயே அங்கெல்லாம் இருக்க முடியாத உங்களுக்கு உணவு தினமும் தருவதாக நான் எப்படி வாக்கு தர முடியும் ? ”



" சரி, அப்படி என்றால் எப்பொழுதெல்லாம் நான் உனக்கு முன்னால் நடந்து கொண்டு இருப்பேனோ அப்பொழுதெல்லாம் எனக்கு உணவு கொடு என அர்த்தம். உனக்குப் பின்னால் நான் நடந்தால் எனக்கு உணவு தேவை இல்லை என்பதாக அர்த்தம், சரியா " என்றார் துறவி.

அதற்கு ஒப்புக் கொண்ட குரு நமச்சிவாயா சொன்னார் " எனக்கு முன்னால் வந்து நின்றால் உணவு தருவேன், இல்லை என்றால் கிடையாது "

துறவியும் அதை ஏற்றுக் கொண்டு கூறினார் " எனக்கு உணவு தேவைப்படும் பொழுது உன் முன்னால் நான் நிற்கின்றேன் "

" சரி, இப்போது சாப்பிடுங்கள் " என்றார் குரு நமச்சிவாயா .

இன்னும் ஒரு நிபந்தனைப் போட்டார் தறவி " எனக்கு உணவு கொடுக்கும் முன் நீ உன்னுடைய வீபுதி பையையும் ருத்திராஷ்ச மாலையையும் தொட்டப் பின்தான் உணவு தர வேண்டும் * (* வீர சைவர்கள் வழக்கப்படி எந்த உறுதி மொழியையும் தருவதற்கு முன் தங்களிடம் உள்ள வீபுதி பையையும் ருத்திராஷ்ச மாலையையும் தொட்டு விட்டுக் கொடுத்தால் அது சத்தியம் செய்து கொடுத்ததிற்கு சமமாகும். அதனால்தான் சிவபெருமான் அவரிடம் அப்படி கூறினார் )

ஆனால் அதை ஏற்க மறுத்து விட்டார் குரு நமச்சிவாயா " நான் முதலில் கூறியபடி என் எதிரில் நீங்கள் வந்து நின்றால் நான் உணவு தருவேன் "

துறவியும் தன் நிபந்தனையில் இருந்து பின் வாங்கிக் கொண்டு கூறினார் "சரி, எனக்கு உணவு தேவைப்படும் பொழுது உன் முன்னால் வந்து நிற்கின்றேன் "

" என்முன் வந்து நின்றால் கண்டிப்பாக உணவு தருவேன் " என மீண்டும் கூறினார் குரு நமச்சிவாயா.

உணவு அருந்த தரையில் அமர்ந்த துறவி கேட்டார் "எனக்கு தாகமாக இருக்கின்றது. சிறிது தண்ணீர் தருவாயா?"

குரு நமச்சிவாயா அசையவில்லை "அதோ திருப்பாற்கடல் குளம் தெரிகின்றதே, அங்கு சென்றால்



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

தண்ணீர் கிடைக்கும் ” என்றார்.

அவர் கூறியவாறு அந்த கடவுள் அங்கு சென்ற பின் அங்கிருந்து மறைந்து விட்டார். அதே துறவி கோலத்தில் ஆலயத்திற்குள் சென்று மூவாயிரம் பண்டிதர்கள் முன்பாக நின்றார்.

“ நான் ஒரு ஏற்பாடு செய்துள்ளேன். என்னை சுமந்து கொண்டு வரும் பல்லக்கையும் மற்ற அனைத்துக் தோரணங்களையும் எடுத்துச் கொண்டு போய் அவரைச் சுற்றித் தோரணங்கள் கட்டி, அவரை இதில் உட்கார வைத்து நான்கு மாட வீதிகளையும் சுற்றி வலம் வந்தப் பின் அவரை இந்த ஆலயத்திற்குள் அழைத்து வரவும் ” என்று கட்டளையிட்டார்.

அவர் கூறியது போலவே அந்த பண்டிதர்களும் அவை அனைத்தையும் எடுத்துக் கொண்டு குரு நமச்சியாவிடம் சென்று அவரை அதில் அமருமாறு வேண்டினர்.

குரு நமச்சிவாயா அதில் அமர மறுத்தார் “ எனக்கு எதற்கு பல்லக்கு ? எனக்கு அது தேவை இல்லை ” என்றார்.

அந்த பண்டிதர்கள் கூறினார்கள் “ இது பல்லக்கு அல்ல. உங்களைப் போன்ற யோகிகள் அமர்ந்து கொள்ள புலித்தோலால் அமைக்கப்பட்டது. ”



ஆனாலும் குரு நமச்சிவாயா ஒப்புக் கொள்ளவில்லை. “ இது எனக்கு ஒத்து வரவில்லை ” என்று கூறி விட வந்தவர்கள் வேறு உபாயம் செய்தனர்.

“நேற்று எங்களுடைய கடவுள் உங்களிடம் வந்த பொழுது என்ன சொன்னீர்கள் ? ” என்று அவர்கள் கூறியதும்தான் முதல் நாள் தனக்கு ஏற்பட்ட வினோத அனுபவத்தை நினைத்துப் பார்த்தார்.

நேற்று வந்தவர் சாதாரணத் துறவியாக இருந்திருக்க முடியாது. ஆகவே உடனடியாக யோக நிலையில் அமர்ந்து கொண்டு முந்தைய நாள் நடந்த நிகழ்ச்சியைமனதில் எண்ணிப் பார்த்தார். அவருக்குப் புரிந்தது வந்திருந்தவர் வேறு யாரும் அல்ல. அது சிவபெருமானேதான்.

யோக நிலையில் இருந்து சகஜ நிலைக்கு வந்தவர் கேட்டார் “ இங்கிருந்து வந்து உங்களிடம் என்ன நடந்தது

எனக் கூறி இருப்பாரே ” முடிவாக நடந்தது என்ன என்று தெரிந்து கொண்ட பின் இப்படிப் பாடினார்.

வீர சைவராக உருவம் ஏந்தி
என் முன் நின்றவர்
மனம் குளிர காட்சி தந்தார்
நான் அவருக்கு உணவு தந்த பொழுது
தினமும் அப்படி கிடைக்க
வழி செய்யுமாறு
கட்டளை இட்டாரே.

அப்படிப் பாடிய பின்னர்தான் அந்தப் பல்லக்கில் அவர் ஏறிக் கொள்ள நான்கு மாட வீதிகளிலும் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றப் பின் ஆலயத்திற்கு திரும்பினர். அங்கு நுழைந்ததும் மீண்டும் ஒரு பாடல் பாடினார்.



தில்லை கூடத்தில்
அழகிய வடிவில்
ஸ்தனங்களை கொண்டவளை
தன் நாயகியாக வைத்துள்ள
அந்த தில்லை நாயகனை துதித்து
உரத்த குரலுடன் தினமும் நான் பாடுகின்றேன்.
இந்த பரந்த பூமியில்
அவர் பெருமையை புரிந்து கொண்டவரின்
பிறப்பு, நேற்று, இன்று, நாளை
அனைத்தையும் விலக்கி விடுவாரா
அவர்களுடைய நன்மைகளையும்
தீமைகளையும் கணக்கிட்டு
தன் பொற் பாதங்களை ( கருணையை )
அவர் மீது வைப்பாரா ?

ஆலயத்திற்குள் நுழைந்து கொடி மரத்தருகில் தன்னுடைய காலணிகளை கழற்றி வைத்தப் பின் தங்கக் கூடத்தில் நுழைந்து தன் கடவுளை தரிசிக்கச் சென்றார்.

அங்கிருந்த மூவாயிரம் பண்டிதர்களிடம் கேட்டார் “நான் என்ன செய்ய வேண்டும் ? ”

ஆனால் பண்டிதர்களுக்குப் பதிலாக அந்த கடவுளே

அசரியாக குரல் கொடுத்தார் “ அனைவரும் பயன் பெறும் வகையில் எதாவது ஏற்பாடு செய் ”

கடவுளே தன்னுடைய காணிக்கையாக எதையும் முதலில் தந்து விட்டால் அங்கு வந்துள்ள பக்தர்கள் அதைப் பார்த்து தாராளமாக தானம் செயவார்கள். அதனால் நன்கொடை கிடைப்பது எளிதாகும் என எண்ணிய குரு நமச்சிவாயா கண்களை மூடிக் கொண்டு ஒரு தங்கத் தட்டை தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு தன் தலை மீது உயரத் துாக்கி வைத்தபடி பாடினார்

எனக்கு குருவாக காட்சி தந்து
என்னை உன்னுடன் இணைத்துக் கொண்டுள்ள
என் தெய்வமே
உன் தாமரை பாதங்களை
இங்கு வந்து தரிசிக்கத்
தேவையான பொருள் உதவி
அனைவருக்கும் குறை இன்றி கிடைக்க
உன்னிடமே நான் இப்போது
பிச்சைக் கேட்கின்றேன்



இப்படி அவர் பாடி முடித்ததும் ஆகாயத்தில் இருந்து பறந்து வந்த ஒரு தங்க நாணயம் அவர் ஏந்தி இருந்த தங்கத் தட்டில் வந்து விழுந்தது. அதை கடவுளே தந்த முதல் நன்கொடை எனக் கருதிய மக்கள் தாங்களும் அப்படி நன்கொடை தரவேண்டும் என கடவுள் எண்ணுகிறார் என நினைத்து தாராளமாக பொன்னும், பொருளும், நகையும், பணமுமாக அங்கேயே நன்கொடை தந்தனர். அவற்றை எல்லாம் குரு நமச்சிவாயா அங்கிருந்த மூவாயிரம் பண்டிதர்களிடம் கொடுத்து விட்டுக் கிளம்பினார்.

கிளம்பியவர் கால் இடறியது. உடனே அவர் அங்கிருந்த பண்டிதர்களிடம் “ போக விடாமல் நான் ஏன் தடுக்கப்படுகின்றேன் ? ”

அவர்களால் அதற்கு விடை தர முடியாததினால் அவரே யோக நிலைக்குச் சென்று கடவுளிடம் தான் தடுக்கப்பட்டதின் காரணம் குறித்துக் கேட்டு அறிந்த பின் சகஜ நிலைக்கு திரும்பி வந்தப் பின் அந்த பண்டிதர்களிடம்

கேட்டார் " பகவானுக்கு ஏதேனும் நகைகள் செய்து வைத்துள்ளீர்களா ? "

சற்று யோசித்தப் பின் அவர்கள் கூறினர் " கின்கிணி மணிகள் வைத்த சிலம்பு மட்டுமே செய்யப்பட்டு உள்ளது. அதைத் தவிற வேறு எதுவும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை"

அதைக் கேட்ட குரு நமச்சிவாயா நகைகளை செய்யும் தட்டான்களை கூப்பிட்டு அனுப்பினார். வந்தவர்களிடம் கேட்டார் " சிலம்பு, கிண்கிணி, மற்றும் வீரகண்டமணி* செய்ய எத்தனை செலவாகும் ? "

(* அப்படிப்பட்ட நகைகள் ஒவ்ஒன்றும் நடனம் ஆடுகையில் வெவ்வேறு ஒலிகளையும் சப்தங்களையும் எழுப்பும் என்பதினால்தான் அவர் அவற்றை செய்யுமாறு கூறினார் )

" ஐந்தாயிரம் தங்க நாணயங்கள் தேவை " என்றனர் அவர்கள். பண்டிதர்களிடம் தந்த நன்கொடைகளை திரும்பப் பெற்றுக் கொண்டவர் அதை அப்படியே தட்டான்களிடம் தந்து அந்த நகைகளை செய்யுமாறு ஆணையிட்டார்.



அவர் ஓய்வாக அமர்ந்து இருக்கையில் அந்த பண்டிதர்கள் குறும்பாக கேட்டனர் " உங்களுடைய கடவுள் இத்தனை விலை உயர்ந்த நகைகளை அணிந்து கொண்டால் அதற்கு தகுந்தபடி நடனம் ஆட வேண்டும் அல்லவா?"

இன்னொருவர் குத்தலாகக் கூறினார் " ஆக அந்த கடவுள் இவருக்காக இங்கு வந்து நடனம் ஆடப்போகிறார் என்கின்றீர்களா ? "

ஆனால் குரு நமச்சிவாயா ஒன்றும் கூறவில்லை. நாற்பது நாட்கள் கழிந்து நகைகள் செய்யப்பட்டு வந்ததும் அனைத்து பண்டிதர்களையும் குரு நமச்சிவாயா அழைத்துக் கேட்டார் " இந்த நகைகளை அணிந்து கொண்டு கடவுள் நடனம் ஆடினால் அதைப் பார்க்க நீங்கள் அனைவரும் தயாரா ? "

" அப்படி நடப்பதைப் பார்க்க நாங்கள் எத்தனைக் பாக்கியம் செய்து இருக்க வேண்டும். அப்படி நடந்து விட்டால் எங்களுடைய இருபத்தி ஒன்று சந்ததிகள் அவருக்கு இங்கு சேவை செய்யும் என உறுதி தருகின்றோம் " என்று

கூறினர் பண்டிதர்கள்.

குரு நமச்சிவாயா நினைத்தார் ” இந்த மக்கள் அனைவரும் சற்றும் நம்பிக்கை இல்லாதவர்கள். அந்த கடவுளே இங்கு வந்து ஆடினால் கூட அது காற்றாக இருக்கும் என்று கூடக் கூறி விடுவார்கள்.”

இப்படி எண்ணியவர் அனைத்துக் கதவுகளையும் மூடிவிடுமாறு கூறிவிட்டு அந்த நகைகளை கடவுளுக்கு அணிவித்தார். அதன் பின் ஒரு பாடலைப் பாடினார்.

தெய்வமே உன்னுடைய ஒரு கால் ஆடினால்
நாங்கள் என்ன அழிந்தா போய் விடுவோம் ?
அப்படி ஒரு காட்சியை
தேவலோகத்தினர் கூடப் பார்த்து இருக்கக் கூடாது
அப்படி நீ ஆடினால்
வெற்றிகரமாக இங்கு வந்துள்ள
பதஞ்சலிகளையும்,
புலி போன்ற கால்களைக் கொண்ட
வியாக்கிரபாதாவையும் களிப்பூட்டினால்
அந்த கால்கள் களைப்படைந்து விடுமா என்ன ?



இந்த பாடலின் ஆத்தத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நடராஜப் பெருமான் சிதம்பரத்தில் ஆடிய ஆனந்த தாண்டவ நடனத்தையும் அதன் பின்னணியையும், ஐதீகத்தையும் பார்க்க வேண்டும்.

சிதம்பரக் கோவில் புராணம் மற்றும் ஸ்தல புராணத்தில் தாரகம் என்ற வனப் பிரதேசத்தில் நடந்ததாக கூறப்படும் அந்த கதை துவங்குகின்றது.

ஒரு முறை பல ரிஷி முனிவர்கள் கூடி பல சக்திகளைத் தரும் மிமிம்சா என்ற யாகம் செய்து கொண்டு இருந்த பொழுது அதைத் தடுக்க எண்ணினார் சிவபெருமான். அழகிய பெண் உருவை ஏந்திய விஷ்ணு மற்றும் ஆதிசேஷ நாகம் போன்றவர்களுடன் சிவபெருமான் அங்கு சென்று முனிவர்களுடன் வேண்டும் என்றே தகராறு செய்யத் துவங்கினார்.

முதலில் அவர்களுக்கு இடையே சிவபெருமானினால்

ஆரம்பித்து வைக்கப்பட்ட வாக்குவாதம், வாத பிரதிவாதங்களுடன் கூடிய சண்டையாக பெரிய அளவில் மாற, இறுதியில் அவர்கள் ஆக்கிரோஷம் சிவபெருமான் மீது மாறியது. மந்திரங்களை பல ஏவி அவரை அழிக்க முயன்றனர். அவர்கள் நடத்திக் கொண்டு இருந்த யாக குண்டத்தில் இருந்து பயங்கரமான ஒரு புலியை எழச் செய்து அதை அவர் மீது ஏவினார்கள். ஆனால் அதைக் கண்டு சற்றும் கலங்காத சிவபெருமான், புன்முறுவலுடன் அந்த புலியைப் பிடித்து தனது சிறு விரல் நகத்தினால் அதன் உடலைக் கீறி அதன் தோலை உரித்து எடுத்து தன் உடல் மீது போர்வைப் போல போர்த்திக் கொண்டார்.

அதைக் கண்டும் மிரளாத முனிவர்கள் பயங்கரப் பாம்பை அந்த குண்டத்தில் இருந்து உருவாக்கி அதையும் அவர் மீது வீச, சிவன் அதைப் பிடித்து தனது கழுத்தில் மாலையாக சுற்றிக் கொண்டார். அதன் பின் அவர் அங்கேயே நடனம் ஆடத் துவங்கினார். ஆனாலும் அந்த முனிவர்கள் அறண்டு போகாமல் வேறு உபாயம் செய்து அவரைக் கொல்ல மாயலக்கன் என்ற சித்திரக் குள்ளனை ஏவி விட்டனர்.



சிவபெருமானை தாக்க அவர் மீது அவன் பாய, சிவன் அவனை கீழே தள்ளி தன்னுடைய கால் விரலினால் அமுக்கினார். அவனுடைய முதுகெலும்பு முறிந்து கீழே விழுந்து அலறினான். அதன் பின்னரும் சிவபெருமானின் நடனம் தொடர்ந்து கொண்டு இருக்க தேவலோகத்து தேவர்களும் முனிவர்களும் அங்கு வந்து அவருடன் சேர்ந்து கொண்டு நடனம் ஆடத் துவங்கினர். பதஞ்சலி சரித்திரத்தில் (4, 61-7:) அந்த நடனம் பற்றி இப்படி விவரிக்கப்பட்டு உள்ளது.

சிவபெருமான் கண் சிமிட்ட விஷ்ணு மத்தளம் அடிக்க, பிரும்மா ஜாலரா தட்ட, இந்திரன் மூங்கிலினால் ஆன குழல் ஊத, சரஸ்வதி யாழ் இசைக்க தன் தலையில் அந்த பாம்பினால் கட்டிக் கொண்டும், யானையை இடுப்பில் கட்டிக் கொண்டும் சிவபெருமான் நடனம் ஆடத் துவங்கினார்.

ஆனால் புராணக் கதைகளின்படியும், ஜதீகங்களின்

அடிப்படையிலும் கூறப்பட்டுள்ள கதை என்ன எனில் சிவபெருமான் தாரகம் வனத்தில் மட்டும் அல்ல, தன்னுடைய நடனத்தின் சக்தியை அது தாங்க முடியாது என்பதினால் அங்கிருந்து நடனமாடிக் கொண்டே வந்து சிதம்பரத்திலும் நடனம் ஆடி பல்வேறு சக்திகளை வெளியில் காட்டினார்.

யோகக் கலையுடன் ஒப்பிடுட்டுக் காட்டும் முறையில் ஸ்துால உடலான சிதம்பரத்தின் வடக்கு, தெற்கு பகுதிகள் உடலின் உள்ளே தவழ்ந்து கொண்டு இருக்கும் இடா மற்றும் பிங்களா இழைவுகள் போல உள்ளதெனக் எடுத்துக் காட்டியும், நடுவில் உள்ள நாபி போல தில்லை வெட்ட வெளியில் பிரபஞ்சக் கதிர்களினால் ஆன சிவலிங்கம் அமைந்துள்ள நடு மையம் எனவும் சுட்டிக் காட்டினார்.

இந்த கதையினால்தான் சிதம்பரம் பிரபஞ்சத்தின் மூல மையம் எனவும் அதை சுற்றியே அனைத்து உலகமும் சுழலுவதாகவும் உள்ளூர் மக்கள் நம்புகின்றனர். அவர் ஆடிய அந்த சக்தி வாய்ந்த நடனத்தினை முழு அளவிலான தெய்வீக நம்பிககையும், துாய எண்ணமும் கொண்டவர்களினால்தான் இரசித்துப் பார்த்து இருக்க முடியும். ஆக சிதம்பரம் உடலின் முக்கியமான மத்திய பகுதி போலவே கருதப்பட்டது. ஆலயத்தின் மத்தியப் பகுதி தாமரை பூவின் நடுப்பகுதியாகவும் அதன் நடுப் பகுதி சிவபெருமான் பேரானந்த நடனம் ஆடிய பகுதியாகவும் கருதப் பட்டது.



குரு நமச்சிவாயாவின் எண்ணப்படி அந்த நடனம் சாதாரண கண்களால் பார்க்க முடியாமல் இருந்தது எனத் தெரிந்தது. சூட சம்மிதா என்ற நூலின்படி அந்த நடனம் மாபெரும் முனிவர்களால் கூட பார்க்க முடியாமல், ஆனால் அவருடன் இருந்த அவருடைய மனைவி மட்டுமே பார்க்கக் கூடிய நிலையில் இருந்தது.

அந்த நடனத்தை மற்றவர்களால் பார்க்க முடியாது என்பதினால் கருணை மனம் கொண்ட தேவியானவள், எப்படி தன்னுடைய பச்சிளம் குழநதையால் மருந்துகளை சாப்பிட முடியாமல் இருக்கும் நிலைகளில் தானே் அதை அருந்திவிட்டு தாய் பாலுடன் கலந்து அதன் வயிற்றுக்கு செல்லும்

பக்கம்
33

வகையில் ஒரு தாய் நடப்பாளோ அது போல தான் கண்ட அந்த நடனக் காட்சியை மற்றவர்களும் காணட்டும் என்ற தயையில் மற்றவர்கள் கண்களில் தான் கண்ட காட்சியை பார்க்கும் சக்தியை செலுத்தினாள்.

அப்படி என்றால் மற்ற முனிவர்களும் ரிஷிகளும் அந்த நடனத்தை எப்படிப் பார்க்க முடிந்தது ? தாரக்கம் வனத்தில் சிவபெருமானே அவர்கள் அந்த நடனத்தைக் காணும் வகையில் அவர்கள் கண்களில் ஒளியேற்றினார்.

சிவகாமி என சிதம்பரத்தில் அழைக்கப்பட்ட தேவியைத் தவிற ஆதிசேஷனின் அவதாரமான பதஞ்சலி முனிவரும், சிவன் பாற்கடல் ஏற்படுத்தித் தந்த உபமன்யூவின் தந்தையான வியாக்கிரபாதாவும் அந்த நடனத்தைப் பார்க்க அருள் செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் சிதம்பரத்தின் மையப் பகுதியில் சிவலிங்கத்தை ஆராதித்துக் கொண்டு இருந்த பொழுது அவர்களுக்குக் காட்சி தந்த சிவபெருமானிடம் தாங்களும் அந்த முடிவில்லாத பேரானந்த நடனத்தைக் கண்டு களிக்க அருள வேண்டும் என்று கேட்க அவர்களுக்கு சிவபெருமான் அப்படியே வரம் அருளினார்.



அந்த நடனத்தின் மகிமைதான் என்ன ? அதைப் பற்றி பதிமூன்றாம் நூற்றாண்டின் சைவ சித்தானந்த கழகத்தின் அதிகாரபூர்வமான உண்மை உலகம் என்ற நூலில் எழுதப்பட்டு உள்ள ஐந்து பாடல்களில் கூறப்பட்டு உள்ளது இது.

--- சிவன் தலையில் உள்ள ஓம்கார் எனப்படும் ஒரே எழுத்து, பிரித்து எடுக்க முடியாத எழுத்து. பிரபஞ்சம் முழுவதும் ஒளிக் கொடுத்தவண்ணம் உள்ளது அது. அதாவது எவர் அந்த ஓம்கார் என்ற ஐந்தெழுத்து மந்திரம் சிவபெருமானின் நடனத்தைக் குறிக்கும் விதமாக உள்ளதாகப் பார்க்கின்றனரோ, தான் என்ற அகம்பாவத்தை அழிக்கின்றார்களோ அவர்களுடைய மறு பிறப்பும், இறப்பும் இறப்பும் ஏற்படுவதில்லை. (சிவபெருமானின் தலையில் உள்ள பிறையை தமிழில் ஓம் என்ற எழுத்தின் வடிவமாகவே நினைக்கின்றனர்)

குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

--- அந்த நடனத்தில் எழுந்த மத்தள ஒலி படைப்பைக் குறிக்க, கைகள் அடைக்கலம் தருவதைக் குறிக்க, பூமியை மிதித்துக் கொண்டும் மேலெழும்பிய நிலையிலும் உள்ள பாதங்கள் ஜீவன் முக்தியை குறிக்கின்றது. ( நடனமாடும் நடராஜர் நான்கு கரங்களுடனும், மேல் எழும்பிய ஒரு காலுடனும் உள்ளார். அந்த ஐந்தும் பஞ்சக்கிரியா என்ற படைத்தல், காத்தல், அழித்தல்,நாடகம் ஆடுதல் மற்றும் கருணைக் காட்டுதல் என்ற ஐந்து நிலைகளை பிரதிபலிக்கின்றன.

சிதம்பர மும்மணிக் கோவை என்ற நூலில் கூறி உள்ளது , தேவா, உன் ஒரு கையில் உள்ள மத்தளம் அனைத்து உலகங்களிலும் உள்ள எண்ணற்ற ஜீவன்களின் உணர்வை தட்டி எழுப்ப, மேல் தூக்கிய கரம் ஜீவனுள்ள மற்றும் ஜீவனற்ற பல்வேறு உலகங்களையும் காத்தவண்ணம் இருக்க, மண்ணில் பதித்துள்ள பாதத்தில் வாழ்வில் கர்ம வினைகளினால் துயருற்றுக் கிடப்பவர்கள் புதைந்து கிடக்க, தூக்கி நிற்கும் உன்னுடைய இரண்டாவது பாதம் உன்னை சரண் அடைந்தவர்களுக்கு பேரானந்தத்தைக் கொடுப்பதை காட்டும் உன் காட்சிதான் என்னே.)



--- கடவுளின் நடனத்தின் மூலம் மாயையை விலக்கி, ஒருவனை சுட்டெரிக்கும் கர்ம வினைகளை களைந்து , தீமைகளை அழித்து கருணைக் காட்டி, பேரானந்தத்தைக் கொடுப்பதைக் காட்டுகின்றார். ( தாரகம் வனத்தில் தான் நடனம் ஆடிக் கொண்டே அந்த கருத்துக்களை சிவபெருமானே சுற்றி இருந்த அனைவருக்கும் விளக்கிக் கூறினாராம் )

--- தங்களுடைய மூன்று நிலைகளையும் கடந்து நின்ற ஞானிகள், கருணைக் கடலாம் கடவுளுடைய நீர்வீழ்ச்சிப் போல கொட்டிய பேரானந்த நடனத்தை மனதால் பருகி மகிழ்ந்து நின்றனர்

--- வார்த்தைகளினால் விவரிக்க முடியாத அளவு கருணைக் காட்டுபவரும் பஞ்சாட்சர மந்திரமான நமச்சிவாயா என்ற எழுத்தின் அதிபதியானவரும் சக்தியாட்டம் ஆட, அதை பக்கத்தில் அமர்ந்தபடி ரசித்துக் கொண்டிருந்தாள் ஹிமாவனின் மகளான பராசக்தி. இந்த காட்சியை மனக் கண்களினால் சுவைத்து களிப்படைபவர்களுக்கு இனி வேறு பிறவியே இல்லை.



இப்போது கூறுவது ஆசிரியரின் கூற்றுக்களே. *“முதலில் குரு நமச்சிவாயாவின் சிதம்பர யாத்திரை உருவகக் கதைப்*

பக்கம்
35

போன்றது. அவர் சிதம்பரத்தை நோக்கிச் சென்றது என்பது தன்னுடைய இருதயத்துக்குள் தனக்குத்தானே ஏற்படுத்திக் கொண்ட ஆன்மீகப் பயணம். (ஆதனால் அப்படி கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடை பெறவில்லை என்று கூறவில்லை. அவைகளில் பல நடந்து இருக்கலாம் என்றாலும் அனைத்து நிகழ்ச்சிகளும் கவனமாகவும் கோர்வையாகவும் தொகுக்கப்பட்டு உள்ளன என்று சுட்டிக் காட்ட விரும்பினேன் )

இடையிடையே இது தொகுக்கப்பட்டுக் தரப்பட்டுள்ள கதை என நினைப்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. முதலாவதாக சிவசைலத்தில் சிவனுடைய மனைவியான சக்தியின் பங்கு என்ன என்பதைப் பார்க்கலாம்.

சுத சம்மிதா என்ற நூலின்படி அவள் சிவனுடைய கருணையை வெளிப்படுத்தி மத்தியஸ்தம் செய்பவளாக அதில் விளங்குகின்றாள். அவளால் மட்டுமே சிவபெருமானின் சக்தி பெற்ற நடனத்தைக் கண்டு களிக்க முடிந்தது. அதை அவள் மற்றவர்களும் கண்டு மகிழும் வகையில் அவளுடைய பக்தர்களுக்கு விஜேச சக்தி தருகின்றாள்.

சைவ சித்தாந்ததத்தில் சக்தி அல்ல, சிவன்தான் உலகைப் படைத்தவர் என்று கூறப்பட்டு உள்ளது. பஞ்சகிருதிகளான படைத்தல், காத்தல், அழித்தல், நாடகம் ஆடுதல், மற்றும் கருணைக் காட்டுதல் என்ற ஐந்து நிலைகளை அவள் தியானம் செய்து பெற்றாள்.

ஓவ்ஒரு நாளும் குரு நமச்சிவாயா சிதம்பரத்திற்கு நடந்து சென்று கொண்டிருந்த பொழுது அங்காங்கே இருந்த உள்ளுர் சக்தி தேவியை பிரார்த்தித்தே உணவு தருமாறு வேண்டினார். கடவுளின் கருணை சக்தி மூலம் கிட்டியதையே உணவு என்றும், ஓவ்ஒரு முறையும் அப்படி உணவு கிடைக்க, அவர் மேன்மேலும் புனிதமாகிக் கொண்டே இருந்தவண்ணம் கடவுளின் அருகில் நெருங்கினார் என்பதை சிதம்பரத்தை நெருங்கினார் என்று கூறப்பட்டு உள்ளது.

சைவ சித்தாந்ததத்தில் சக்தி மாயாவை வெளிப்படுத்தி அதே சமயத்தில் தனது கருணையையும் காட்டி அதை கடந்து செல்லவும் வழி வகுப்பதாக கூறப்பட்டு உள்ளது.

உண்மை விளக்கம் என்ற நூலின் முப்பத்தி ஆறாவது



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

பாடல் நடனத்தினால் வெளி வந்த சக்திகள், மாயை என்பதை துார விலக்கி , கர்மாக்களை அழித்து , ஆத்மாவின் தீய குணங்களையும் விலக்கி, கருணை மழை பொழிந்து பேரானந்த கடலில் ஒருவரைக் கொண்டு சென்றது என்று கூறுகின்றது.

குரு நமச்சிவாயா சிவகங்கை குளத்தில் முழுகிக் குளித்த பொழுது அவர் அப்படிப்பட்ட அந்த பேரானந்த கடலில் முழுகினார் என்பதே விளங்கும். எவருக்கு இந்த குளத்தில் குளிக்கும் பாக்கியம் கிடைத்ததோ அவர்களுடைய அனைத்துப் பாபங்களும் அழியும், அவனுடைய தீய வினைகள் அனைத்தும் சூறையாடப்படுவது திண்ணம் என அப்பொழுது அவர் கூறியதை கவனிக்க வேண்டும்.



சக்தியின் கருணையினால் மெல்ல மெல்ல அவர் இருதயம் போன்ற மூல மையப் பகுதியை அடைந்தார். அந்த பேரானந்த கடலில் மூழ்கியவருடைய கர்ம வினைகள் அகன்றன, அதனால் தாமரை மலருடைய மையப் பகுதியில் இருந்த மென்மையான இதயம் போன்ற கர்பக் கிரகத்தை அடைந்தவர் அங்தே சிவபெருமானை அல்ல தன்னுடைய குகை நமச்சியாவை தரிசித்தார் என்பதில் இருந்து குருவும் கடவுளும் ஒன்றே என்றும் ஒருவர் அறிவு ஒளி பெறும் பொழுது இருவரையுமே இருதயத்தில் உணர முடியும் என்ற பண்டைய கால நம்பிக்கை வலுப் பெறுகின்றது.

மாயையான மற்றும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட, அதே சமயம் உண்மையான கருத்துக்களை சைவம் கொண்டுள்ளது. சிவனுடைய உள்ளுக்குள் இருந்த சக்தி மூலமே பஞ்சக்கிரியாக்களை அவர் வெளிப் படுத்தினார் என்றாலும் அதை சிவபெருமான் தானாகச் செய்யவில்லை. அவர் என்றுமே மௌனமாக, அமைதியாக, ஒரே நிலையில் இருந்தபடி எந்த நடப்புக்களினாலும் ஈர்க்கப்படாமல் இருக்க சக்திதான் அவருடைய சக்தியை பயன் படுத்தி அவர் சார்ப்பில் அனைத்தையும் செய்கிறாள்.

ஓவ்ஒருவனும் படைப்பின் மூலாதாரத்தை அடையும் நிலைக்குச் செல்லும் பொழுதுதான் அந்த பேரானந்தத்தை அனுபவிக்க முடியும். அங்கு உணரப்படும் பேரானந்த நடனம்

பக்கம்
37

உடல் அசைவுகளுடனோ, கண்களால் பார்க்கபபடும் நிலையிலோ அமைந்து இருக்கவில்லை. அதைதான் இரமண மகரிஷி இருதயத்தின் நடனக் கூடத்தில் சிவபெருமான் அசைவில்லாத ஆட்டம் ஆடுகின்றார் என்றார். (அருணாசல அஷ்டகம், பாடல் ஏழு ) .

நான் முதலிலேயே கூறி உள்ளேன். குரு நமச்சிவாயா கதை இரண்டு வகைகளில் பின்னிப் பிணைந்தது– ஆன்மீகத்தை மையமாக கொண்டும், ஸ்துல உருவிலும் அதிசயங்களை நிகழ்த்திக் காட்டியது. அவை இரண்டையும் இந்த கதை தொடரும் பொழுது நன்கு உணர முடியும்:

குரு நமச்சிவாயா சிவபெருமானை அங்கு கூடி இருக்கும் அனைத்து பக்தர்களும் பண்டிதர்களும் பேரானந்தம் பெறும் வகையில் நடனம் ஆடுமாறு வேண்டிப் பாடத் துவங்கினார். அவர் தோற்றத்தை மற்றவர்களுக்குக் காட்டுமாறும், அவர்களுடைய இதயத்தில் அவர் எழுந்தருள வேண்டும் எனவும் வேண்டினார்.

குரு நமச்சியா தான் பெற்றிருந்த சக்தியாலும் அதிகாரத்தினாலும் அங்கு கூடி நன்றிருந்தவர்களுக்கு அந்த ஆன்மீக அற்புதத்தையும் அனுபவத்தையும் உணரும் தன்மையைக் கொடுக்க முடிந்தது. அவர் அந்த தன்மையை அவர்களுக்குள் ஏவியதும் அவர்கள் பயத்தினால் உறைந்து நின்று நடுங்கினர். ஏன் எனில் நல்லெண்ணம் அற்றவர்கள் தெய்வீகத்தின் அருகில் சென்றால் அப்படித்தான்பயம் ஏற்படும்."

இனி மேலே நடந்த காட்சியை பார்க்கலாம். குரு நமச்சிவாயா நடராஜக் கடவுளிடம் நடனம் ஆடுமாறு வேண்டிப் பாடத் துவங்கினார்.

கடவுட்களின் மூல நாயகனே,
சிதம்பரத்துக் கடவுளே
பலரும் பல்வேறு விதங்களில்
உன் புகழ் பாடிக் கொண்டிருக்க
தம்புருவும் நாரதரும் இங்கிருக்க

( தம்புரு மற்றும் நாரதர் என்ற இரண்டு தேவ ரிஷிகளும் சிவபெருமான் முதலில் தாரகம் வனத்தில் நாட்டியம்



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

ஆடியதைக் கண்டு களித்தப் பின் அவருடன் தொடர்ந்து சிதம்பரத்தில் ஆடிய நடனத்தைக் காண வந்தனர் )

விஷ்ணு தோள்களில் தொங்கிய
மத்தளம் தட்ட
அது எழுப்பிய ஓசையோ
உச்ச ஸ்தாயியை சென்றடைய
கௌரி என்ற அம்பிகை
அழகிய யாழ் மீட்ட
தில்லைக் கூடத்தில் நீ
நடனமாடிக் கொண்டிருக்க
உன் தங்க நிறப் பாதங்களை,
தாமரை மலர் போன்ற பாதங்களை
அழகிய இடையையும்,
அற்புதமான தொப்புள் பிரதேசத்தையும்,
மார்பில் பூசிய சாம்பலையும்
புலித் தோல் போர்த்திய உடம்பையும்
மேரு மலை போன்ற
நான்கு நிறத் தங்கக் கைகளையும்
கறுத்த தொண்டையையும்,
அற்புத முகத்தையும்
புனித இடம் போன்ற தலைப் பகுதியையும்
என் கண்களால் கண்டு களித்திட
நேரமோ காலமோ
போவதும் தெரியாது
மீண்டும் பகல் கூடத்
தோன்றுமா தெரியாது



இப்படியாக நமச்சிவாயா பாடத் துவங்கியதும் நடராஜர் ஆடத் துவங்கினார். அதைக் கண்ட அனைவரும் பயத்தால் உறைந்து பூமியில் விழுந்தனர், நமஸ்கரித்தபடி கண்களை மூடிக் கொண்டனர், முகத்தை பூமியில் பதித்து வைத்தக் கொண்டனர்.

பலமணி நேரம் நடந்த அந்த நடனம் நிற்காமல் நடந்து கொண்டு இருக்க அந்த மூவாயிரம் பண்டிதர்களும் ஒரே குரலில் கூறினர் “நடனம் வெகு நேரமாக தொடர்ந்து

பக்கம்
39



குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA

கொண்டே இருக்கின்றது. குரு நமச்சிவாயா, இந்த நடனத்தை ஆரம்பித்து வைத்தவரே, தில்லை நாதனே, எமைவிட்டுப் போகாமல், தொடர்ந்து ஆடுபவரே , நீங்கள் நடனத்தை நிறுத்தவில்லை எனில் உங்கள் பெருமையை நாங்கள் எப்படிப் பாடுவது ?”,

குழம்பி நின்றவர் போல இருந்த குரு நமச்சிவாயா கேட்டார் “ நானா நடனமாடச் சொன்னேன்...நானா நடனத்தை நிறுத்தச் சொல்வேன் ? ”

“ காலத்தை நிர்ணயிப்பவர்தான் முதலில் நிறுத்த வேண்டும் ” என்றனர் பண்டிதர்கள்.

குரு நமச்சிவாயா நடனத்தை ரசித்துக் கொண்டு இருந்ததினால் அவர்களுடைய வேண்டுகோட்களை நிராகரித்து விட்டு அந்த நடனத்துக்கு ஏற்ப இன்னும் பாடலானார்.

எங்களை அனுதினமும் காப்பவரே,
அனைத்ததையும் படைப்பவரே
தில்லைக் கூடத்தில் நடனமாடும் புனிதமானவரே
முடிவில்லாமல் நடனமாடிக் கொண்டே இருந்தால்
தூக்கி நிற்கும் பாதம்
வலியால் துடிக்குமா
மாயலக்கன் என்ற அசுரனை அழித்த
மறு காலும்தான் தடம் மாறி நடனம் ஆடுமோ ?

மாயலக்கன் எனற அரக்கன் சிவபெருமானை அழிப்பதற்காக ரிஷிகள் படைத்து அனுப்பிய சித்திரக் குள்ளன். அவனுடைய முதுகெலும்பை தன் கால்களால் முறித்தார் சிவபெருமான். ஆனந்த தாண்டவத்தின் அத்தனை சிற்பங்களிலும் அவனை சிவபெருமான் தன்னுடைய வலது காலால் மிதித்து நின்றபடி உள்ளதாகவே காட்டப்பட்டு உள்ளது. மாயலக்கன் என்பவன் அறியாமையை குறிப்பவன். அவனை அந்த நடனத்தின் பொழுது சிவபெருமான் மிதித்துக் கொண்டே இருப்பது அறியாமையால் கடவுளை உணராமல் இருப்பவனின் அறியாமையை அழித்ததைக் காட்டுகின்றது. தமிழில் மாயலக்கன் என்று பெயர் கொண்டதை சமஸ்கிருதத்தில் அபஸ்மாரா என கூறப்பட்டது. இரண்டின் அர்த்தமும் அறியாமைதான் .

பக்கம்

40

அவர் இரண்டாவது பாடலை பாடத் துவங்க, நடனம் இன்னும் வெறி பிடித்தவர் ஆட்டம் போல தீவீரமடைந்தது. அந்த மூவாயிரம் பண்டிதர்களும் அதை நிறுத்த முடியாமல் திணறிப் போய் இன்னொரு வழியில் முயலத் துவங்கினர்.

குரு நமச்சிவாயா சிவனைப் போற்றிப் பாட அவரும் அதனால் மகிழ்ந்து நடனம் ஆடுகின்றார். ஆகவே நாம் குரு நமச்சிவாவை புகழ்ந்து பாடுவோம் . அப்படியாகிலும் அவர் நம்முடைய வேண்டு கோளை ஏற்றுக் கொண்டு நடனத்தை நிறுத்த வைக்கின்றாரா என்று பார்க்கலாம் என்று முடிவு செய்தனர். இதைப் பாடினர்:-



ஆயிரக்கணக்கான வரிகள் கொண்ட பாடலை
தில்லை நாயகனைப் போற்றி அவர் பாட
காமன் அழிந்து ஓட

*( காமன் என்ற கடவள் பிரும்மாவின் வேண்டுகோளை ஏற்று சிவபெருமானின் தவத்தை கலைத்து பார்வதியுடன் காதலில் அவரை ஈடுபடச் செய்ய முயன்ற பொழுது அவரை சிவபெருமான் அழித்து விட்டார். காமன் என்பது காமம், அதை அவர் அழித்தது காமத்தை ஒழித்த நிலையை எடுத்துக் காட்டும், மற்றும் பார்வதியுடன் என்றும் உள்ள சிவபெருமான் ஆடிய நாடகமே அது )*

காளிதேவியை தன் பக்கத்தில்
என்றும் வைத்திருக்கும்
வேட்டையாடுபவனின் நிலை கண்டு
மயங்கியவனைப் போல
குரு நமச்சிவாயாவின் பாடலைக் கேட்டு
மயங்கி மகிழ்ந்த தேவன்
தன் பாதத்தைத் தூக்கி நடனம் ஆடினார்

இப்படி அந்த பண்டிதர்கள் பாட அந்த வழி பலன் தந்தது. அவர்களுடைய பாடலைக் கேட்ட குரு நமச்சிவாயா, சிவபெருமானின் நடனத்தை நிறுத்த மற்றொரு பாடலைப் பாடினார்

குரு நமச்சிவாயா

GURU NAMACHIVAYA

என் தேவனே,
தில்லைக் கூடத்தில் நடனமாடுபவனே
தத்தா, தத்தத்த தீ என்ற தாளத்துக்கேற்ப
நாட்டியம் ஆடியவரே

என் வேண்டுகோளை ஏற்று
உன் நடனத்தை இனி நீ நிறுத்துவாயா ,

இந்தப் பாடலை அவர் பாட நடனம் நின்றது. குரு நமச்சிவாயா ஆண்டவனையே ஆட்கொண்டு ஆட வைத்தாரே என்ற உண்மையை உணர்ந்த அந்த பண்டிதர்கள் அவர் இறந்து விட்டால் அவர் உடலையே சிவலிங்கமாகப் பாவித்து வழிபடுவோம் என சங்கல்பம் செய்து கொண்டனர்.

அதற்குப் பிறகு அங்கு தங்கிய குரு நமச்சிவாயா நூற்றுக் கணக்கான பாடல்களைப் பாட அவற்றில் பல இன்னமும் உள்ளன. அவரைப் பற்றி வாழ்க்கை வரலாறு எழுதிய ஒரு ஆசிரியர் ” அவர் எழுதிய அனைத்துப் பாடல்களும் சிவபெருமானை போற்றியே இருந்தது. வேறு எந்த கடவுளின் நினைவுமே அவர் மனதில் புகுந்து கொள்ளவில்லை. ” என்றார்.



அது முற்றிலும் உண்மை போலவே அவர் இயற்றிய அண்ணாமலை வெண்பா காட்டியது. ( *அண்ணாமலை என்பது அருணாசலாவைக் குறிக்கும். அதன் அர்த்தம் நுழைய முடியாத, செல்ல முடியாத நிலையில் உள்ள மலை என்பது. வெண்பா என்பது நாலு வரிகளைக் கொண்ட பாடல். முதல் மூன்று வரிகளும் ஒரே நீளத்தில் இருக்க நான்காம் வரி சற்று சிறியதாக இருக்கும்* ). அதில் அவர் தன்னுடைய குருவான சிவபெருமானை அருணாசலா என்ற மனிதராக கருதி அவரைக் குறித்து போற்றிப் பாடியுள்ளார்.

அந்த வெண்பாக்களைப் படித்தால் எப்படி அவர் தன்னுடைய குருவின் ஆணைகளை ஏற்று நடந்தார் எனவும், அதே சமயத்தில் இருதயத்தில் இரகசியமாக அருணாசல சிவன் என்ற தன்னுடைய குருவான குகை நமச்சிவாயாவை பற்றிய கனவுகளுடனேயே இருந்து இருக்கின்றார் என்பது நன்கு விளங்கும். எந்த அளவிற்கு அவர் மனித உருவில் குகை நமச்சிவாயா என்ற உருவில் வந்த அந்த மலையை போற்றி, வழிபட்டு, சிரத்தையுடன் அதற்கு சேவை செய்துள்ளார் என்பது புலனாகும்.

குரு நமச்சிவாயாவின் வாழ்க்கை இத்துடன் திடீர் என முடிக்கப்பட்டு விட்டது. அவர் மற்றபடி மேலும் என்ன செய்தார் என்பதையோ, அவர் சமாதி அடைந்ததையோ விளக்கப்படவில்லை. அதன் பிறகு பல்வேறு நல்ல

காரியங்களை நடத்திய பின் மாணிக்கவாசகருடன் இணைத்துப் பேசப்பட்ட திருப்பெருந்துறை என்ற ஊரில் அவர் மரணம் அடைந்தார் என்று தெரிவிக்கின்றன.

ஆனால் சிதம்பரத்தில் அதை மறுப்பது போல, குரு நமச்சிவாயா இறந்த பின் எழுப்பப்பட்டுள்ள ஒரு கல்வெட்டில் வாசகம் உள்ளது ( *அதில் அவர் இறந்தது பன்னிரண்டாம் நூற்றாண்டு என உள்ளது. ஆனால் குரு நமச்சிவாயா எழுதி உள்ள பாடல்களில் குகை நமச்சிவாயா குறித்த உள்ள செய்திகள் நூற்று ஆண்டுகள் பின்பு எழுதப்பட்டு உள்ளதைப் போல காணப் படுகின்றது* )

இப்படிப்பட்ட இலக்கியங்களில் உண்மை சம்பவங்களுடன் சிறிதளவு கற்பனைகளையும் கலந்து இருப்பது தவிர்க்க முடியாமல் இருந்து விடுகின்றன. குரு நமச்சிவாயாவின் நூல்களிலும் சிதம்பரத்தில் உள்ள கல்வெட்டுக்களிலும் உள்ள செய்திகள் தெரிவிப்பது என்ன எனில் :-



1) குரு நமச்சிவாயா அருணாசலத்தில் தன் குருவான குகை நமச்சிவாயாவுடன் வாழ்ந்து வந்தார்
2) அருணாசலருடைய சக்தி மற்றும் குருநாதரின் அருளினால் பெரும் ஆன்மீக அறிவு பெற்றார்
3) சிதம்பரத்திற்கு சென்று அங்கு பல ஆலயங்களுக்கு நற்காரியங்களை செய்து உள்ளார். அங்குள்ள கல்வெட்டுக்கள் அவர் சிவபெருமானுடைய பல்வேறு ரூபங்களைக் குறித்து போற்றிப் பாடியுள்ள பாடல்களின் பட்டியலை தருகின்றன. அதில் நமச்சிவாயா அருணகிரியில் சிவலிங்கமாக உள்ள சிவனுடன் ஐக்கியம் ஆகிவிட்டார் என கூறப்பட்டு உள்ளது.

அந்த கல்வெட்டை தானமாகத் தந்துள்ள சின்னநல்ல நாயன் என்பவர் அதில் இந்த செய்தியை செதுக்கி உள்ளார்.

> “அருணாசலமலைப் பிரதேசத்தில் இருந்த குகை நமச்சிவாயாவின் சிஷ்யரான குரு நமச்சிவாயா புலி போன்ற சிதம்பரத்துக்கு வந்து சேவை செய்தார். அவருடைய குருவும் தங்க நிற கூடத்தில் அமர்ந்து உள்ளவருமான அவரை நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வணங்கி நிற்கிறோம்.”

அதில் காணப்படும் ஆச்சரியமான பல செய்திகள் நம்ப முடியாமல் இருக்க முடியும். மற்றும் அவை ஆசிரியரின் மன எண்ணத்தில் இருந்தும் உதித்து இருக்கலாம். ஆனால் அவை நடந்திருக்க முடியாதவை அல்ல. நான் திரு எச். டபில்யூ. எல். பூன்ஜா ( பாபாஜி) என்பவருடன் ஒரு முறை பேசிக் கொண்டு இருந்தபொழுது அவர் இமய மலையில் தான் ஒரு யோகியை சந்தித்ததாகவும் அவரால் எந்த கடவுளுடனும் பேச முடியும், உணவை வரவழிக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பாபாஜி கூறிய ஒரு விஷேச உணவை 15,000 ஆயிரம் அடி உயரத்தில் எளிதில் ஏற முடியாத இமய மலையில் இருந்த இடத்தில் சில நொடிகளில் வரவழித்துக் காட்டினார் என்ற செய்தியைக் கூறினார். காஷ்மீரைச் சேர்ந்த சிறுவரான யோகி செல்வி சரஸ்வதி தேவியுடன் சாதாரணமாக பேச முடிந்தது. அது மட்டும் அல்ல அவளுடைய கருணையினால் அந்த யோகி பத்து பாஷைகளிலும் சரளமாகப் பேசினார். ஆகாயத்தில் பறவைப் போலப் பறந்து காட்டினார். அந்த சித்தியை அவர் இராஜ யோக சித்தியைப் பயின்று கற்று அறிந்திருந்தார். ஆனால் அவர் ஆத்ம ஞானம் பெறவில்லை, என்பதற்காக ஒரு குருவைத் தேடி அங்கு அலைந்து கொண்டு இருந்தார்.



குரு நமச்சிவாயா தான் இயற்றிய பாடல்களில் அருணாசலரின் கருணையினாலும் தன்னுடைய குருவின் மகிமையினாலும் இனி பிறப்பே எடுக்க முடியாத பாக்கியத்தை தான் அடைந்து விட்டதாக எழுதி உள்ளதில் இருந்து அவர் செய்து காட்டிய அற்புதங்களை விட அவர் பெற்ற ஆத்ம ஞானம் எத்தனை உயர்ந்தது என்பதை வெளிப்படுத்தி உள்ளார்.

குரு
நமச்சிவாயா

GURU
NAMACHIVAYA



# குரு நமச்சிவாயா

# GURU NAMACHIVAYA

(Parts of this article were first published in *The Mountain Path*, 1992, pp. 13-22
இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில்
மலை வழி-1992, பக். 13-22 என்ற இதழில் வெளியாயிற்று)


மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
டேவிட் காட்மன்

Original in English
DAVID GODMAN

தமிழ் மொழி பெயர்ப்பு
சாந்திப்பிரியா
(nrj_1945@yahoo.com)

Tamil Translation
SANTHIPRIYA
(nrj_1945@yahoo.com)


